# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 08 வள்ளுவர் ஆண்டு 2055 வைகாசி 14 திங்கட்கிழமை 27.05.2024 கதிர் 201


# இன மேலாதிக்க மனோநிலைக்கு ஜனாதிபதியும்கூட விதிவிலக்கல்ல

## சீறிதரன் எம்.பி. முறைப்பு



ஈழத் தமிழர்களுக்கான நிரந்தர அரசியல்தீர்வை அதிகாரபூர்வமாக வழங்குவதற்குரியசந்தர்ப்பங்களைத் தமிழ்மக்கள்,சிங்களத் தலைவர்களுக்கு ☞2

## இது ரகசியம் அல்ல!

ஒற்றுமை ஒற்றுமை என்று பேசிய ஒரு மனுசனை தனிமரமாக நிற்க வைத்துவிட்டு மற்றெல்லாரும் ரணிலுக்குப்பின்னால்ஓடிவிட்டதைப் பார்க்கும்போது இரத்தக் கண்ணீர் வராத குறைதான் என்று நேற்று அழைப்பெடுத்து குறைப்பட்டார் அரசியல் ஆர்வலர் ஒருவர். நாட்டு அரசியல், தமிழ்க் கட்சி அரசியல் பற்றியெல்லாம் அவ்வப்போது அழைப்பெடுத்துப் பேசக்கூடிய நபர் அவர். தவறாமல் இனி இது இரகசியமல்லபத்தியைவாசித்துவிட்டு பாராட்டத் தோன்றினால் பாராட்டவும் கோபப்படத் தூண்டினால் கோபப்படவும் உரிமை எடுத்துக் கொள்ளக்கூடியவர். அவர்தான் நேற்று சோகத்தோடு இப்படிப் பச்சாதாபப்பட்டார்.

எடுத்த எடுப்பிலேயே ''யார் சிறீதரன் எம்.பியின் நிலை பற்றியா சொல்கிறீர்கள்?" என்றேன். "அப்ப... உங்களுக்கும் அது மனசில தொட்டிருக்கு'' என்று கூறி அது தொடர்பில் பலதும் பத்துமாகப் பேசினார். கிட்டத்தட்ட 25 ☞2

## மழைக் காலநிலை மேலும் தொடரும்

தென்மேல் பருவப் பெயர்ச்சி நிலைமை காரணமாக நாட்டில் தற்போது நிலவும் மழையுடனான சீரற்ற காலநிலை மேலும் தொடரும் என எதிர்பார்க்கப்படுவதாக வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

மேல், சப்ரகமுவ, மத்திய, வடமேல் மற்றும் தென் மாகாணங்களில் இன்று அவ்வப்போது மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

சீரற்ற காலநிலையுடன் ☞8

## பிரான்ஸ் நாட்டு தூதர் நேற்றுத் திடீர் மறைவு

இலங்கைக்கான பிரான்ஸ் தூதுவர் ஜீன் ஃபிராங்கோயிஸ் பேக்டெட் அவரது உத்தியோகபூர்வவீட்டில் சடலமாக மீட்கப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இராஜகிரிய பகுதியிலுள்ள அவரது உத்தியோகப்பூர்வவீட்டிலேயே சடலமாக மீட்கப் பட்டுள்ளார்.

53 வயதான அவர் திடீர்சுகயீனம்காரணமாக உயிரிழந்திருக்கலாம் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளதோடு சடலம் மீதான நீதிவான் விசாரணைகள் ☞2

## தேர்தலில் போட்டியிடுவது குறித்த ரணிலின் தீர்மானம் ஒரு மாதத்தில்

### அமைச்சர் ஹரீன் ஆரூடம்

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதுகுறித்துரணில் விக்கிரமசிங்க இன்னும் ஒரு மாத காலத்தில் தனது முடிவை அறிவிப்பார் என்று சுற்றுலாத்துறைமற்றும்காணி விவகாரங்கள் அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற நிகழ்வில் கலந்துக் கொண்டதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் மேற்கண்டவாறுகுறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேதமாசவுக்கும், மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் ☞8

## வவுனியா பல்கலைக்கழகத்திற்கு ஒரு மருத்துவபீடம் வழங்கப்படும்

### ஜனாதிபதி நேற்று மாங்குளத்தில் தெரிவிப்பு



வவுனியாவைத்தியசாலைபோதனாவைத்தியசாலையாகத்தரமுயர்த்தப்பட்டு, வவுனியா பல்கலைக்கழகத்திற்கு ஒரு மருத்துவபீடமும் வழங்கப்படும் என்று ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார்.

மாங்குளம் ஆதார வைத்தியசாலையில் ☞2

## தனித்துப் போராடி ஜனாதிபதியை சந்தித்த கேப்பாப்புலவு பெண்கள்

### காணிகளை விடுவிக்கும்படி ரணிலிடம் வலியுறுத்து

கேப்பாப்புலவில் உள்ளதமதுகாணிகளை விடுவிக்கும்படிஜனாதிபதியிடம்நேற்றுவலியுறுத்தினர் இரு பெண்கள். இவர்கள்இருவர்மட்டும் தனித்துப் போராட்டம்நடத்திஜனாதிபதியைச் சந்தித்துத் தமது கோரிக்கையை அவரிடம் நேரடியாகச் சமர்ப்பித்தனர்.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க முல்லைத்தீவு மாவட்டத்தில் 'உறுமய' வேலைத் திட்டத்தின் கீழ் காணி உறுதிப் பத்திரங்களை வழங்கும் நிகழ்வில் பங்கேற்பதற்காக புதுக் குடியிருப்பு மத்திய மகா வித்தியாலயத்திற்கு வருகை தந்தார். அப்போது ஜனாதிபதியைச் சந்திக்க வேண்டும் எனக்கூறிஇந்தஇரண்டு பெண்களும் கல்லூரி முன்பாகஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இது குறித்து அறிந்த வடமாகாண ஆளுநர் பி. எஸ். எம். சார்ள்ஸ், இரு பெண்களும் ☞8

## மேலும் 566 ஆசிரியர்கள் வடக்கில் நியமிக்கப்படுவர்

### அனுமதி கிடைத்தது என்கிறார் ஆளுநர்

வடக்குமாகாணத்தில் மேலும் 556 ஆசிரியர் நியமனங்களைவழங்க அமைச்சரவை அங்கீகாரம்வழங்கியுள்ளதாக வடமாகாண ஆளுநர் திருமதி பி. எஸ். எம். சார்ள்ஸ் தெரிவித்தார்.

புதுக்குடியிருப்பு மத்திய மகா வித்தியாலயத்தில் நேற்று முற்பகல் நடைபெற்ற வவுனியா மாவட்ட 'உறுமய' காணி உறுதி வழங்கும் நிகழ்ச்சியில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

முதல் முறையாக ஜனாதிபதி இந்த மாவட்டத்திற்கு வருகை தந்திருப்பது தொடர்பில் மக்கள் பெருமகிழ்ச்சியடை கின்றனர். நேற்று 376 பட்டதாரி ☞8

## இலங்கையிலும் ஐ.எஸ்.ஐ.எஸ்ஸா?

### விசாரிப்பதற்கு தனிப் பொலிஸ் குழு

ஐ.எஸ்.ஐ.எஸ்அமைப்புடன் தொடர்புடையவர்கள் இலங்கையில் உள்ளனரா என்பதைக் கண்டறிய விசேட குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ள தாகவும் தற்போது அவசர விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் பொலிஸ் மா அதிபர் தேசபந்து ☞2

## "எமது ஜனாதிபதிக்கு நன்றி"

### செல்வம் எம்.பி. நேற்று உருக்கம்

மாங்குளம் ஆதார வைத்தியசாலையில் அமைக்கப்பட்டுள்ள வைத்திய புனர்வாழ்வு சிகிச்சைமற்றும்மனநல அபிவிருத்தி நிலையம் இந்தப்பிரதேசத்திற்குக் கிடைத்த வரப்பிரசாதம். அதனைப்பெற்றுத்தந்த எமதுஜனாதிபதிக்குநன்றி என்று நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், தெரிவித்தார்.

வைத்திய புனர்வாழ்வு சிகிச்சை மற்றும் மனநல அபிவிருத்தி ☞8

## அனைவரும் நம்பிக்கை வைக்கும் ஆளும்தரப்பை உருவாக்குவோம்

### ஜே.வி.பி. தலைவர் மன்னாரில் தெரிவிப்பு

தெற்கு, வடக்கு, கிழக்கு, மேற்கு என்று நாட்டின் அனைத்துத் தரப்பினரும்நம்பிக்கை வைக்கும் ஒரு ஆளும் தரப்பைஉருவாக்குவதே எமது இலக்கு என்று தேசிய மக்கள் சக்தியின் (ஜேவிபி) தலைவர் அநுரகுமாரதிஸாநாயக்க தெரிவித்தார்.

மன்னாரில் நேற்று நடைபெற்ற மக்கள் சந்திப்பின்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

தெற்கு, வடக்கு, கிழக்கு, மேற்கு என்று நாட்டின் அனைத்துத் தரப்பினரும்நம்பிக்கை வைக்கும் ஒரு ஆளும் தரப்பை உருவாக்குவதே எமது இலக்காகும். நிலத்தைப் பகிர்ந்துகொள்வதற்காக போர் செய்தோம். கடலுக்காவும் ☞2

## சிறந்த சமூகத்தை உருவாக்கும் சட்ட ரீதியான சூழல் ஏற்பட்டுள்ளது

### இப்படிச் சொல்கிறார் நீதி அமைச்சர்

சிறந்த சமூகம் ஒன்றைக்கட்டியெழுப்புவதற்குத் தேவையான சட்டரீதியிலான சூழலை நாங்கள் ஏற்படுத்தி இருக்கிறோம் என்று நீதிஅமைச்சர்விஜேதாச ராஜபக்ச தெரிவித்தார்.

நுவரெலியாவில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டுஉரையாற்றிய அவர்இதனைத்தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவித்ததாவது:

எமது நாட்டின் பொருளாதாரத்துக்கு சுமார்200வருடகாலமாக பெருந்தோட்ட ☞2

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

நிமிடங்களாக அவர் பேசிய எல்லாவற்றையும் உங்களிடம் பகிர்ந்துகொள்ள இன்னும் பல நாட்கள் வேண்டும். அதனால், சுருக்கமாக அவர் சொன்னதைச் சொல்லிவிடுகின்றேன்.

தமிழ்த் தேசியத்தின் பேரால் ஒற்றுமை ஒற்றுமை என்று கட்சித் தலைவர் தெரிவையொட்டி மாய்ந்துபோனவர் சிறீதரன். அவர் அப்படிச் சொன்னபோது அதை வரவேற்று, நாங்களும் ஒற்றுமைக்குத் தயார்தான் என்றவர்கள்புளொட்மற்றும்ரெலோ போன்ற கட்சிகளின் தலைவர்கள். எல்லாம் தமிழ்த் தேசியத்தின் பேரால்தான் சொன்னார்கள். ஆனால் தேசியத்தைக் கட்டிப் பிடித்துக்கொண்டு சிறீதரன் மட்டும் தனித்து நிற்க மற்றெல்லாரும் ஜனாதிபதியின்வடக்குநிகழ்வுகளின் மேடைகளில் ஏறி 'ஜம்' என்று இருந்துவிட்டார்கள் என்பதுதான் அவரது ஆதங்கத்தின் அடிநாதம்.

வடக்குக்கு வந்திருந்த ஜனாதிபதியின் நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ள நாடாளுமன்ற உறுப்பினர்கள் என்கிற வகையில் ஆளும் தரப்பல்லாத தமிழ் எம்.பிக்களுக்கும் அழைப்பு அனுப்பப்பட்டிருந்தது. அதில் யாழ். மாவட்டத்தில் நடந்த நிகழ்வுகளில் மாவட்டத்தின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் என்ற வகையில் தமிழ் அரசுக் கட்சியின் சுமந்திரனும் புளொட்டின் சித்தார்த்தனும்கலந்துகொண்டனர். அதேபோன்று நேற்று வன்னியில் நடந்த நிகழ்வுகளில் அந்த மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் என்ற வகையில் ரெலோ தலைவர் செல்வம் அடைக்கலநாதனும் வினோ நோகராதலிங்கமும் கலந்துகொண்டனர்.

கலந்துகொள்ளாதவர்கள்தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் இரு கஜன்களும்சிறீதரன்எம்.பியும்தான். இதில் முன்னணி எப்போதும் இதுபோன்ற நிகழ்வுகளில் கலந்துகொள்வதில்லை. ஆனால் இம்முறை தனித்துப் போனவர் சிறீதரன்தான். அதைத்தாங்க முடியாமல்தான் அந்தப் பெரியவர் என்னிடம் புலம்பித் தீர்த்தார். ஒற்றுமை ஒற்றுமை என்று பேசியவர்கள் எல்லாம் சீறிதரனின் மேலால் ஏறி நடந்துபோயிருக்கிறார்கள் என்பது அவரது கருத்து.

யாரைநம்புவதுயாரைநம்பாமல் விடுவது என்பதெல்லாம் சிறீதரன் எம்.பியின் தெரிவு. அரசியலில் எந்தவொருமுடிவும்எழுந்தமானமாக எடுக்கப்படுவதில்லைத்தானே, அவரவர் நலன்கள் சார்ந்துதானே எடுக்கப்படுகின்றன. பின்னர் அதெல்லாம் மக்கள் நலனுக்காக எடுக்கப்பட்ட முடிவுகள் என்று சொல்லிக்கொள்வார்கள். அதனால் இதைப் பற்றியெல்லாம் அதிகம் கவலைப்பட்டுக்கொள்ளாதீர்கள் என்று கூறி சமாளித்துவிட்டு ஒரு வழியாக அழைப்பைத் துண்டித்துக்கொண்டேன்.

........................

அவரது அழைப்பைத் துண்டிப்பதில் நான் அவசரம் காட்டியதற்குக் காரணம் உண்டு. ஏனெனில் நேற்றுப் பகலில்தான் மற்றொருவர் அழைப்பெடுத்து விக்னேஸ்வரன் - ரணில் சந்திப்புப் பற்றி என்னை வறுத்தெடுத்தி-ருந்தார்.

அவர்என்னசென்னார்என்றால், ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்ப் பொது வேட்பாளர் ஒருவரை உங்களால் தெரிவு செய்துவிட முடியுமா என்று ரணில் கேட்டது, தமிழர்களைச் சீண்டிவிட்டு அப்படியொரு வேட்பாளரை நிறுத்துவதற்கான உத்தி என்று எனக்கு வகுப்பெடுத்தார் அவர்.

அவர் சொன்னதன் சாராம் சத்தையும் சுருக்கமா கவே உங்களுக்குச் சொல்லி விடுகின் றேன். ரணில் உண்மையில் அப்படிச் சொன்னாரா என்பது தெரியாது. அப்படியே அவர் சொல்லியிருந்தாலும்தமிழ்ப்பொது வேட்பாளரைநிறுத்தினால்அதனால் ரணிலுக்கு லாபம்தான். அதன் மூலம் சஜித்துக்கோ அனுரவுக்கோ தமிழர்களின் வாக்குகள் போகாது. எனவே விக்னேஸ்வரனையும் தமிழர்களையும் சீண்டிவிட்டு தமிழ் பொது வேட்பாளரை நிற்கச் செய்வது ரணிலின் யோசனையாக இருக்கும். அல்லது, ரணிலைக்காட்டி அப்படித்தமிழர்களைச்சீண்டிவிடும் வேலையைவிக்னேஸ்வரனேகூடச் செய்திருக்கலாம். மானம், ரோசம், பழிக்குப் பழி உணர்வு எல்லாம் தமிழர்களுக்கு அதிகம் என்பதால், இப்படிச் சீண்டிவிட்டால் தமிழ் மக்கள் சிங்களத் தலைவர்களை எதிர்ப்பதாக நினைத்து தமிழ்ப் பொது வேடபாளருக்குப் பின்னால் திரள்வார்கள்என்றுவிக்னேஸ்வரன் கருதியிருக்கலாம் என்றார் அவர்.

தமிழ்ப் பொது வேட்பாளரைப் பற்றிச் சும்மா கதைச்சாலே "சதிக் கோட்பாளர்கள்" என்று பெயர் வைக்கிறார்கள். இதற்கிடையில் உங்களுடையசதிக்கோட்பாட்டையே முன்வைத்தால் என்னென்ன சொல்வார்களோ தெரியாது, எதற்கும் கவனமாக இருங்கோ என்று சொல்லி வைத்தேன் நான்.

..............

ரணிலின் வடக்குப்பயணத்தை பற்றியது என்பதால் மற்றொரு கொசுறு விடயத்தையும் அப்படியே சொல்லி விடுகின்றேன். ஜனாதிபதியின்வடக்குப்பயணத்தில் இரு பிரதான நிகழ்ச்சிகள்தான் முக்கியத்துவம் பெற்றிருந்தன. ஒன்றுவடக்கின்சுகாதார மருத்துவக் கட்டமைப்புக்களை மேம்படுத்தும் அபிவிருத்தித் திட்டங்களைத்திறந்து வைப்பது, மற்றையது காணி உரித்துப்பத்திரங்களை மக்களுக்கு வழங்குவது.

இதில்யாழ்ப்பாணம், மாங்குளம், கிளிநொச்சி ஆகிய இடங்களில் மருத்துவக் கட்டமைப்புக்கள் திறந்து வைக்கப்பட்டன. 2,400 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்பட்ட பிரமாண்டமான மருத்துவ வசதி மற்றும் ஆராய்ச்சித் தொகுதிகளைக் கொண்டது இந்தக் கட்டமைப்பு. இதற்கு அடித்தளம் இடப்பட்டது வடக்கு மாகாண சபை பதவியில் இருந்த காலத்தில்தான். அதுவும் அப்போது மாகாண சுகாதாரத்துறை அமைச்சராக இருந்த மருத்துவர் சத்தியலிங்கம்தான் இந்தத் திட்டங்களின் மூளை. ஏ - 9 பாதையில் வவுனியா முதல் யாழ்ப்பாணம்வரையில் ஒவ்வொரு வைத்தியசாலைகளுக்கும் தனிச் சிறப்பு மருத்துவ வசதிக் கட்டமைப்புக்களை ஏற்படுத்தும் வகையிலமைந்த திட்டம் அது.

இதையொட்டி அவர் வெளிநாடுகளுக்குச் சென்று யோசனைகள் நடத்திதிட்டங்கள்தயாரித்துஅதற்கான நிதி அனுசரணையாளர்களையும் தேடிப் பிடித்து என முழுமையாகப் பணியாற்றி இருந்தார். அப்போது மத்தியசுகாதாரத்துறைஅமைச்சராக இருந்தவரான மருத்துவர் ராஜித சேனாரத்னவும் சத்தியலிங்கத்தின் இந்த முயற்சிகளுக்குப் பக்கபலமாக இருந்தார்.

இப்படி மருத்துவர் சத்தியலிங்கத்தின் விதையில் முளைத்து இன்று பயன்தரும் மரங்களாக நிமிர்ந்து நிற்கும் மருத்துவ வசதிக் கட்டமைப்புக்களைத்தான் வடக்கு மக்களுக்கான இலங்கை அரசின் அபிவிருத்தி என்று கடந்த இரண்டு மூன்று நாட்களாகப் பீற்றித் திரிந்தார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க. இந்தமருத்துவவசதிக்கட்டமைப்பின் மற்றொருஅங்கமானபருத்தித்துறை, மந்திகைஆதாரவைத்தியசாலையில் ஏற்படுத்தப்பட்ட கட்டடத் தொகுதியை சில மாதங்களுக்கு முன்னர் ஜனாதிபதி திறந்து வைத்தபோது இந்தத் திட்டத்தின் சூத்திரதாரியான சத்தியலிங்கத்தை வெறும் பார்வையாளராகவே அமரவைத்திருந்தார்கள். அதுபற்றிப் பலரும் சுட்டிக்காட்டியதை அடுத்து, இந்தத் தடவை ஒரு வழியாக மருத்துவர் சத்தியலிங்கத்தின் பங்கு பணியை ஆளும் தரப்பினர் அங்கீகரிக்கவேண்டியவர்களானார்.

அவருக்கு நிகழ்வு மேடையில் இடம் ஒதுக்கப்பட்டதுடன். அவரது சேவைக்காக பொன்னாடை போர்த்தும் கௌரவிக்கப்பட்டார். இருந்தாலும் சத்தியலிங்கத்தையும் மேடையில் வைத்துக்கொண்டே இவையெல்லாம் தனது வெற்றிகரமானகருத்திட்டங்கள்என்றுமேடையில் பெருமை பீற்றிக்கொள்ளவும் ரணில் தவறவில்லை. எப்படியோ குறைந்தபட்சம் இந்தத் திட்டத்தில் மருத்துவர் சத்தியலிங்கத்தின் பங்கு பணி அங்கீகரிக்கப்பட்டதாவது சற்று ஆறுதல்தான்.

இடிமின்னல்
(idiminnal@gmail.com)

## இன....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பலமுறை வழங்கியிருந்தும் அவர்கள் அவற்றை சரிவரப் பயன்படுத்த முன்வராமைக்கு, இனமேலாதிக்க மனோநிலையே காரணம். அதற்கு ரணிலும் விதிவிலக்கல்ல என நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்தார்.

கௌதாரிமுனை மக்களைச் சந்தித்து சமகால அரசியல் நிலைவரங்கள் குறித்தும், அந்த மக்களின் அடிப்படைப்பிரச்சினைகள்குறித்தும் நேற்றுக் கலந்துரையாடிய சமயம் அவர் இதனைத் தெரிவித்தார்.

வடக்குக்கு வந்துள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்ப் பொது வேட்பாளரை நிறுத்துவது சாத்தியமற்றதெனக்குறிப்பிட்டுள்ளதை மேற்கொள்காட்டி கருத்துரைத்த சிறீதரன், தமிழர்களுக்கான அரசியல் தீர்வை வழங்குவதற்கு பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த வேட்பாளர்கள் எவரும் தயாரில்லை. சிங்களத்தலைவர்கள் ஈழத் தமிழர்களை எடுப்பார் கைப்பிள்ளைகளாக பயன்படுத்த நினைக்கும்மனோநிலையிலிருந்து வெளிவராத வரை இந்த நாட்டில் இன நல்லிணக்கம், சமத்துவம், சகோதரத்துவம் என்பனவற்றுக்கு சாத்தியமேயில்லை - என்றார்.

## வவுனியா....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வைத்திய புனர்வாழ்வு சிகிச்சை மற்றும் மனநல அபிவிருத்தி நிலையத்தை நேற்று திறந்து வைக்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நெதர்லாந்துஅரசின்ஆதரவுடன் 4,500 மில்லியன் ரூபாய் செலவில் இந்த மருத்துவ சிகிச்சை நிலையம் நிர் மாணிக்கப்பட்டுள்ளது. இது வட மாகாணத்தில் உள்ள மிகப் பெரிய மருத்துவ புனர்வாழ்வு சிகிச்சை மற்றும் மனநல அபிவிருத்தி நிலையம் என்பதோடு மனநல மறுவாழ்வுப்பிரிவு, அவசரசிகிச்சைப் பிரிவு, அறுவை சிகிச்சைப் பிரிவு, ஆய்வுகூடம், கதிரியக்கப் பிரிவு, வெளிநோயாளர்பிரிவுமற்றும்தீவிர சிகிச்சை பிரிவு ஆகியவற்றையும் கொண்டுள்ளது.

நிகழ்வில் உரையாற் றிய ஜனாதிபதிமேலும்தெரிவித்ததாவது:

இந்த மருத்துவப் பிரிவை இன்று திறந்து வைக்கும் போது இதன் பின்னணியைக் குறிப்பிட வேண்டும். 2009ஆம் ஆண்டு போர் நிறைவடைந்த பின்னர், போர்காரணமாகவடமாகாணத்தில் தடைப்பட்ட சேவைகளை மீளமைப்பதற்கான அடிப்படைப் பணிகளை அப்போதைய ஆளும்தரப்பு ஆரம்பித்தது.

முதல் கட்டப் பணிகள் நிறைவடைந்த நிலையில், இந்தப் பிரிவுகள் அனைத்தின் முன்னேற்றத்துக்குமாக இரண்டாம் கட்டத்தை அமுல்படுத்த வேண்டியிருந்தது. அதற்கிணங்க, வடமாகாணத்தில் சுகாதாரத் துறையின் மேம்பாட்டிற்காக புதிய மருத்துவப்பிரிவுகளைநிறுவுவதற்கு பிரதமர் என்ற ரீதியில் நெதர்லாந்து அரசுடன் கலந்துரையாடினேன். அப்போது வடமாகாண சபையில் இருந்த சுகாதார அமைச்சரும், முன்னாள் முதலமைச்சரும் இந்த நடவடிக்கைகளில்ஈடுபட்டிருந்தனர்.

போரிற்கு முன்னர், கொழும்புக்கு அடுத்தபடியாக சிறந்த சுகாதார சேவையைக் கொண்டபிரதேசமாகயாழ்ப்பாணம் திகழ்ந்தது. மேல்மாகாணம் அபிவிருத்தியடைந்தநிலையில்தென் மாகாணமும் மத்திய மாகாணமும் அபிவிருத்தியடைந்தன.

வடக்கு மாகாணத்தை மீண்டும் அந்த நிலைக்கு கொண்டு வருவதே எனது நோக்கமாகும். அதனால்தான் இந்தமருத்துவமனைகள்தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்பட்டு மேம்படுத்தப்படுகிறது.

அத்துடன், 2017ஆம் ஆண்டு யாழ். பல்கலைக்கழகத்தில் மருத்துவ பீடத்திற்குத் தேவையான கட்டடங்களை நிர்மாணிப்பதற்கும் நான் பிரதமராக இருந்து பணத்தை ஒதுக்கினேன். இன்று இந்த திறப்பு விழாவில்கலந்துகொள்ளும்வாய்ப்பு எனக்கு கிடைத்தது. ஜனாதிபதியாகப் பதவியேற்றவுடன் இந்தப் பணிகள் உடனடியாக நிறைவு செய்ய வேண்டும் என்று பணித்தேன். இப்போது வடக்கு மாகாணத்தில் நவீனமருத்துவமனைகள்உள்ளன.

யாழ்ப்பாணவைத்தியசாலையை தேசிய வைத்தியசாலையாக மாற்ற தீர்மானித்துள்ளோம். மேலும் மன்னார் வைத்தியசாலையும் அபிவிருத்தி செய்யப்படும் அதேவேளை வவுனியா வைத்தியசாலையை போதனா வைத்தியசாலையாக மாற்றுவதுடன் வவுனியா பல்கலைக்கழகத்திற்கு மருத்துவ பீடமொன்றும் வழங்கப்படும். ராகம வைத்தியசாலைக்குப் பிறகு இந்த நவீன இயந்திரங்களைக் கொண்ட ஒரே வைத்தியசாலை மாங்குளம் வைத்தியசாலை என்பது குறிப்பிடத் தக்கது.

போர் காரணமாக அங்கவீனமடைந்தவர்கள் மற்றும் மனநலம் பாதிக்கப்பட்டவர்களுக்குச் சிகிச்சை அளிப்பதற்காக ராகம வைத்தியசாலை உருவாக்கப்பட்டது. போரினால் பாதிக்கப்பட்ட இப்பிரதேச மக்களுக்கு ராகம வைத்தியசாலை போன்றநவீனவைத்தியசாலையை வழங்குவதற்கு நாம் நடவடிக்கை எடுத்துள்ளோம்.

வடமாகாணத்தில் நிர்மாணிக்கப்பட்டுள்ள 04 வைத்தியசாலை பிரிவுகளில்உள்ளபலஉபகரணங்கள் இப்போது இலங்கையில் உள்ள பல வைத்தியசாலைகளில் இல்லை. இந்தச் சாதனங்கள் பாதுகாக்கப்பட வேண்டும். அதற்கு மருத்துவமனை நிர்வாகமும், மருத்துவமனை முகாமைத்துவமும் முயற்சி எடுக்க வேண்டும்.

மருத்துவமனை நிர்வாகம் மற்றும் முகாமைத்துவத்தின் சிறப்பான நிலை காரணமாக கியூபா சுகாதார சேவைகளில் முன்னணியில் உள்ளது. எனவே, மருத்துவமனை நிர்வாகத்தையும் முகாமைத்துவத்தையும் உயர் நிலைக்கு கொண்டு வர நாமும் பாடுபடவேண்டும்.

அதற்கு, உலக சுகாதார நிறுவனம்மற்றும்ஆசியஅபிவிருத்தி நிதியத்தில் இருந்தும் நிதி ஒதுக்கீடு பெறலாம். இந்தச் செயற்பாடுகள் அனைத்தினூடாகவும் நாட்டில் நம்பிக்கையானசுகாதாரசேவையை ஏற்படுத்த எதிர்பார்க்கின்றோம் என்பதையும் கூற வேண்டும் என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

## அனைவரும்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போர் செய்தோம்.

தற்போது வடக்கு கடற்பரப்பில் மீன்பிடிப்பதுயார்?தென்பகுதியினரா இல்லை வடபகுதியினரா என்று பார்க்கின்றபோது இந்தியர்களே அதிகளவில் மீன்களைப் பிடிக்கின்றார்கள்.

அதேபோன்று மன்னாரின் கனிம மணல் யாருக்குச் சொந்தமாக உள்ளது. ஆஸ்திரேலிய நிறுவனமே அதனை உரிமை கொண்டாடுகின்றது. மன்னாரில் காற்றுச்சக்தி காணப்படுகின்றது. அதிலிருந்து மின்சக்தியை உற்பத்தி செய்யலாம். ஆனால் அதனை இந்தியாவின்அதானிநிறுவனத்திற்கு வழங்கியுள்ளார்கள்.

இவ்வாறு நாட்டின் வளங்களை சூறையாடுவதற்கு இடமளிக்க முடியாது. தேசிய மக்கள் சக்தி தலைமையில் நாட்டின் வளங்கள் சூறையாடுவதை தடுப்பதற்காக ஒரு ஆளும் தரப்பு உருவாக்கப்படும் என்றார்.

## இலங்கையிலும்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தென்னகோன் தெரிவித்துள்ளார்.

இந்தியாவின்குஜராத்மாநிலத்தில் தாக்குதல் நடத்துவதற்குத் தயாராக இலங்கையிலிருந்து அகமதாபாத் நகருக்கு சென்றிருந்த இலங்கை ஐஎஸ்ஐஎஸ் அமைப்பைச் சேர்ந்த நால்வர் அண்மையில் அகமதாபாத் சர்தார் பட்டேல் சர்வதேச விமான நிலையத்தில்கைதுசெய்யப்பட்டதாக இந்திய ஊடகங்கள் செய்திவெளியிட்டுள்ளன.

இதன்படி ஐ.எஸ்.ஐ.எஸ் அமைப்புடன்தொடர்புடையமேலும் பலர் நாட்டில் உள்ளனரா என்பது குறித்து பாதுகாப்பு தரப்பினரால் தற்போது விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

## பிரான்ஸ்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடத்தப்படவுள்ளன என்றும் தெரிவித்தனர். சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை இராஜகிரிய பொலிஸார் மேற் கொண்டு வருகின்றனர்.

## சிறந்த....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மக்கள் வழங்கிய ஒத்துழைப்பை நாங்கள் மதிக்கவேண்டும். நாட்டில் எவ்வாறான பிரச்சினை இடம்பெற்றாலும் தோட்ட மக்கள் பொருளாதாரத்திற்குப் பெரும் பங்களிப்பை வழங்கினார்கள். அவர்கள் அனைவரையும் நாங்கள் மதிக்கிறோம்.

உலகில் இருக்கும் பிரச்சினைகளில் நூற்றுக்கு 80 சதவீதம், தகுதி இல்லாதவர்களுக்கு பதவி வழங்குவதன் காரணமாகவே ஏற்படுகின்றது. நாங்கள் 30 வருட போர்அனுபவத்தைகண்டோம். 88, 89மக்கள்விடுதலைமுன்னணியின் பயங்கரவாதத்தைக் கண்டோம்.

மீண்டும்அவ்வாறானபோருக்கு நாங்கள் சொல்லத் தேவையில்லை. நாங்கள் மக்களுக்காகவே அரசியல் செய்யவேண்டும். மலையக மக்களுக்கு காணிப்பிரச்சினை இருக்கிறது. சம்பளப் பிரச்சினை இருக்கிறது. பெருந்தோட்ட மக்களின் சம்பளத்தை அதிகரிப்பதற்கு ஆளும்தரப்பு பிரேரித்திருக்கிறது.

அதுதொடர்பில் பல்வேறு பிரச்சினைகள் இருக்கின்றன. அதற்குத் தீர்வு பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுப்போம். கடந்த ஜனவரிமாதத்தில்நுவரெலியாமாவட்டத்தில் நாங்கள் நடமாடும் சேவை ஒன்றைச் செயற்படுத்தினோம்.

இதன்போது தேசிய அடையாள அட்டை இல்லாமல் இருந்த சுமார் 2 ஆயிரம் பேருக்கும் அடையாள அட்டைபெற்றுக்கொடுதோம். பிறப்புச் சான்றிதழ் இல்லாமல் இருந்த 10 ஆயிரம் பேருக்கு பிறப்புச்சான்றிதழ் பெற்றுக்கொடுத்தோம்.

வட மாகாணத்தில் இடம் பெற்ற நடமாடும் சேவையின்போது 12 ஆயிரம் பேர் வரையானவர்கள் பிறப்புச் சான்றிதழ் பெற்றுக்கொண்டார்கள். நாடொன்றின் சட்டம் ஆட்சியாளருக்கும் மக்களுக்கும் ஒரே மாதிரி அமைய வேண்டும்

அரசியல்வாதிகள் இலஞ்சம் பெறுகிறார்கள். மோசடிமிக்கவர்கள் என பெருமளவில் குற்றச்சாட்டு தெரிவிக்கப்படுகிறது. ஒரு சில அரசியல்வாதிகளின் செயற்பாடுகள் காரணமாக கடந்த காலங்களில் மக்களுக்கு அரசியல் விரக்தி ஏற்பட்டது. எதிர்கால சந்ததியினருக்கு சிறந்த நாடொன்றை ஏற்படுத்திக்கொடுப்பது அரசியல்வாதிகளின் பொறுப்பாகும்.

திருட்டு, ஊழல் மோசடிகளை இல்லாமல் செய்வதற்காகப் புதிய சட்டங்களை ஏற்படுத்தி இருக்கிறோம். சிறந்த சமூகம் ஒன்றை கட்டியெழுப்புவதற்கு தேவையான சட்ட ரீதியிலான சூழலை நாங்கள் ஏற்படுத்தி இருக்கிறோம் என்றார்.

காலைக்கதிர் Kalaikkathir

# இலங்கைத் தமிழர்கள் விவகாரத்தில் மனித உரிமை நாடுகள் வேடிக்கை

## அன்புமணி கண்டனம்



இலங்கைப் போரில் கொல்லப்பட்ட ஈழத்தமிழர்களின் குடும்பங்களுக்கு நீதி பெற்றுத் தருவதற்காக ஐக்கிய நாடுகள் அவையில் இந்தியா குரல் கொடுக்க வேண்டும். ஈழத்தமிழர்களுக்கு நீதி வழங்காவிட்டால் இலங்கையுடனான உறவை முறித்துக் கொள்வதாக இந்தியா எச்சரிக்க வேண்டும். ஈழத்தமிழர்களின் தந்தை நாடான இந்தியா, அதன் தூதரக வலிமையை முழுமையாகப் பயன்படுத்தி ஈழத்தமிழர்களுக்கு நீதி பெற்றுத் தர வேண்டும். - என்று பாமக தலைவர் அன்புமணி ராமதாஸ் கூறியுள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் -

இஸ்ரேலுக்கும், ஹமாஸ் அமைப்புக்கும் இடையிலான போரில் 35 ஆயிரத்துக்கும் கூடுதலானவர்கள் படுகொலை செய்யப்பட்டுள்ள நிலையில், அதற்கு காரணமான இஸ்ரேல் ஆட்சியாளர்கள் மீது பன்னாட்டு நீதிமன்றங்களில் வழக்குகள் தொடுக்கப்பட்டு, விசாரணைகள் தொடங்கியுள்ளன. பாலஸ்தீன மக்களுக்கு ஏற்பட்ட பாதிப்புகளுக்கு நீதி வழுங்க மேற்கொள்ளப்பட்டுள்ள இந்த நடவடிக்கைகளை வரவேற்கும் அதே நேரத்தில் இதே நீதி ஈழத்தமிழர்களுக்கு வழுங்கப்படாதது ஏன்? என்ற வினாவும் எழுந்திருக்கிறது.

இஸ்ரேல் நாட்டுக்கும், பாலஸ்தீனத்தில் செயல்பட்டு வரும் போராளிக் குழுவான ஹமாஸ் அமைப்புக்கும் இடையே கடந்த சில மாதங்களாக கடுமையான போர் நடைபெற்று வருகிறது. இந்தப் போரில் இதுவரை 35 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் கொடூரமாக கொல்லப்பட்டிருப்பது மட்டுமின்றி, பன்னாட்டு மனித உரிமைகள் சட்டமும், பன்னாட்டு மனிதாபிமான சட்டமும் மீறப்பட்டுள்ளதாக குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன.

அவற்றின் அடிப்படையில், ஐநா அமைப்பின் கீழ் செயல்பட்டு வரும் ஹாலந்து நாட்டின் தி ஹேக் நகரில் உள்ள பன்னாட்டு நீதிமன்றத்தில் இஸ்ரேல் ஆட்சியாளர்கள் மீது இனப்படுகொலை வழக்கை தென்னாப்பிரிக்க அரசு அண்மையில் தொடர்ந்து நடத்தி வருகிறது. மேலும், போர்க்குற்றங்கள், மனித குலத்துக்கு எதிரான குற்றங்கள், இனப்படுகொலை ஆகிய அட்டூழியக் குற்றங்களுக்கு எதிரான விசாரணைகளும் பன்னாட்டு நீதிமன்றங்களில் தொடங்கப்பட்டிருக்கின்றன.

இதற்கெல்லாம் உச்சமாக பாலஸ்தீன மக்களை இனப்படுகொலை செய்ததற்காக இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு, பாதுகாப்பு அமைச்சர் யோவ் காலண்ட், போருக்கு காரணமான ஹமாஸ் அமைப்பின் மூன்று தலைவர்கள் ஆகியோரை கைது செய்ய வேண்டும் என்றும், அதற்கான பிடி ஆணையை தி ஹேக் நகரில் செயல்பட்டு வரும் பன்னாட்டு குற்றவியல் நீதிமன்றம் வெளியிட வேண்டும் என்று அந்நீதிமன்ற தலைமை வழக்கறிஞர் கரீம்கான் வலியுறுத்தியுள்ளார்.

இஸ்ரேல் நாட்டின் போர்க்குற்றங்கள் தொடர்பாக மேற்கொள்ளப்படுள்ள நடவடிக்கைகள் அனைத்தும் வரவேற்கத்தக்கவை. அதேநேரத்தில் இலங்கையின் ஒன்றரை லட்சம் அப்பாவித்தமிழர்கள் படுகொலை செய்யப்பட்ட விவகாரத்தில் அமெரிக்கா, இந்தியா உள்ளிட்ட உலகின் மனித உரிமை பேசும் நாடுகள் கடந்த 15 ஆண்டுகளாக எந்த நடவடிக்கை வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருப்பது ஏன்? என்பது தான் பாமக பொதுவெளியில் முன்வைக்க விரும்பும் வினாவாகும். ஆனால், அதற்கு பதில் தான் இல்லை.

இத்தனைக்கும் பன்னாட்டு குற்றவியல் நீதிமன்றத்தின் தலைமை வழக்கறிஞரும், அந்த நீதிமன்றம் அமைத்த பன்னாட்டு சட்ட வல்லுனர்கள் குழுவும் வெளியிட்டுள்ள அறிக்கைகளில், தெரிவிக்கப்பட்ட கருத்துகளை ஆய்வு செய்தால், போர்க்குற்றங்கள் தொடர்பாக இஸ்ரேலுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் இலங்கைக்கு எதிராகவும் எடுக்கப்பட வேண்டும் என்பதை புரிந்து கொள்ள முடியும். "உலகின் முக்கியமான பிரச்சினை ஒன்றில் நாம் தெளிவான முடிவை எடுப்போம்.

பன்னாட்டு மனித உரிமைச் சட்டத்தை சமமாக நடைமுறைப்படுத்துவதற்கான நமது விருப்பத்தை நாம் வெளிப்படுத்தவில்லை என்றால், சில தேர்ந்தெடுக்கப்பட்ட நிகழ்வுகளில் (சில நாடுகளுக்கு எதிராக) மட்டும் பயன்படுத்தப்படுகிறது என்ற எண்ணம் உருவானால், அந்தச் சட்டம் நிலைகுலைவதற்கான சூழல்களை நாமே உருவாக்குகிறோம். பன்னாட்டு மனித உரிமைச் சட்டம் அனைத்து தனி நபர்களுக்கும் பொருந்தும், அனைவருக்கும் சமமாக பொருந்தும்" என்று வழக்கறிஞர் கரீம் கான் வெளியிட்ட அறிவிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

அதேபோல், பன்னாட்டு குற்றவியல் நீதிமன்றத்தால் அமைக்கப்பட்ட வல்லுனர் குழு, அந்த நீதிமன்றத்தின் தலைமை வழக்கறிஞருக்கு அளித்துள்ள பரிந்துரை அறிக்கையில்,"பன்னாட்டு மனித உரிமை சட்டத்தின் பிடியிலிருந்து விலக்கு அளிக்கக்கூடிய தகுதி எந்த போருக்கும் கிடையாது. எந்தக் குழந்தையின் உயிரையும் இன்னொரு குழந்தையின் உயிரை விட குறைத்து மதிப்பிடக்கூடாது. நாம் பயன்படுத்தும் சட்டம் மனிதகுலத்தின் சட்டம், அது ஒரு குறிப்பிட்ட தரப்பினருக்கான சட்டம் அல்ல. போரில் பாதிக்கப்படும் அனைவரையும் அது பாதுகாக்க வேண்டும்" என்று கூறப்பட்டிருக்கிறது. பன்னாட்டு குற்றவியல் நீதிமன்ற வழக்கறிஞர் மற்றும் வல்லுனர் குழு தெரிவித்துள்ள கருத்துகளின் அடிப்படையில் இஸ்ரேலுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் இலங்கைக்கு எதிராகவும் எடுக்கப்பட வேண்டும். அது தான் நீதி.

ஆனால், இலங்கையில் ஒன்றரை லட்சம் அப்பாவித் தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டது, போருக்குப் பிறகு தமிழர்கள் கொடுமைப்படுத்தப்பட்டது போன்ற போர்க்குற்றங்களுக்கான ஆதாரங்கள் திரட்டப்பட்டுள்ள போதிலும் இலங்கைக்கு எதிராக இதுவரை நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை. போர்க்குற்றங்களை இழைத்தவர்கள் 15 ஆண்டுகளாக சுதந்திரமாக நடமாடிக் கொண்டு தான் இருக்கின்றனர். இலங்கையில் தமிழர்களுக்கு எதிரான போர்க்குற்றங்களும், ஒடுக்குமுறைகளும் தொடர்ந்து கொண்டு தான் இருக்கின்றன. இலங்கையில் நிகழ்த்தப்பட்ட போர்க்குற்றங்களுக்கு நீதி கிடைக்கவில்லை என்று ஐநா மனித உரிமைகள் ஆணையம் 17.05.2024 அன்று வெளியிட்ட அறிக்கையானது போர்க்குற்றவாளிகளை தண்டிக்கும் கடமையை இலங்கை சரியாக செய்யவில்லை என்பதை வெளிச்சம் போட்டு காட்டியுள்ளது. அதனால், இலங்கை செய்யத் தவறியதை உலக நாடுகள் தான் செய்ய வேண்டும் என்று கூறியுள்ளது. எனவே, ஈழத்தமிழர்களுக்கு நீதி பெற்றுத் தரும் கடமை உலக நாடுகளுக்கு, குறிப்பாக, இந்தியாவுக்கு உள்ளது. இலங்கை சிக்கலில், இந்திய அரசு இப்போது மேற்கொண்டுள்ள நிலைப்பாடு மாறினால் ஈழத்தமிழருக்கு இனியாவது நீதி கிடைக்கும்.

எனவே, இலங்கையில் நடைபெற்ற போர்க்குற்றங்கள், மனித குலத்துக்கு எதிரான குற்றங்கள், இனப்படுகொலை, கட்டமைக்கப்பட்ட இன அழிப்பு இப்போதும் தொடர்வது ஆகியவற்றுக்கு எதிராக இந்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். இலங்கைப் போரில் கொல்லப்பட்ட ஈழத்தமிழர்களின் குடும்பங்களுக்கு நீதி பெற்றுத் தருவதற்காக ஐக்கிய நாடுகள் அவையில் இந்தியா குரல் கொடுக்க வேண்டும். ஈழத்தமிழர்களுக்கு நீதி வழங்காவிட்டால் இலங்கையுடனான உறவை முறித்துக் கொள்வதாக இந்தியா எச்சரிக்க வேண்டும். ஈழத்தமிழர்களின் தந்தை நாடான இந்தியா, அதன் தூதரக வலிமையை முழுமையாகப் பயன்படுத்தி ஈழத்தமிழர்களுக்கு நீதி பெற்றுத் தர வேண்டும் என்று வலியுறுத்துகிறேன். - என்று அவர் கூறியுள்ளார். (05)

## 13.5 கோடி ரூபாவுக்கு விற்பனை செய்யப்படவிருந்த 14 போலி மாணிக்கக் கற்களுடன் ஆறு பேர் கைது

13.5 கோடி ரூபாவுக்கு விற்பனை செய்யப்படவிருந்த 14 போலி மாணிக்கக் கற்களுடன் ஆறு சந்தேக நபர்கள் வெள்ளிக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளனர் என கட்டுகஸ்தோட்டை பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போதே சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

காலி , ஹினிதும மற்றும் கொழும்பு ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த ஆறு நபர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேக நபர்களில் இருவர் மோட்டார் சைக்கிள் மூலம் இந்த போலி மாணிக்கக் கற்களைக் கண்டி பிரதேசத்திற்கு எடுத்துச் சென்றுள்ளனர் என பொலிஸ் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இந்நிலையில், இந்த மாணிக்கக் கற்கள் போலியானதாக இருக்கலாம் என சந்தேகிக்கும் பொலிஸார் அவற்றைத் தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகார சபைக்குப் பரிசோதனைக்காக அனுப்பி வைத்துள்ளனர்.

விசாரணையில் சந்தேக நபர்களிடமிருந்து மாணிக்கக் கற்களைப் பரிசோதிக்கும் இயந்திரம் மற்றும் மாணிக்கக் கல் சான்றிதழ் உள்ளிட்ட பொருள்கள் கைப்பற்றப்பட்டுள்ளன என பொலிஸார் தெரிவித்தனர். இந்த மாணிக்கக் கல் சான்றிதழும் போலியானதாக இருக்கலாம் என சந்தேகிக்கும் பொலிஸார் அதனைத் தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகார சபைக்குப் பரிசோதனைக்காக அனுப்பி வைத்துள்ளனர்.

இதனையடுத்து சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ள நிலையில் இது தொடர்பான விசாரணைகளை கட்டுகஸ்தோட்டை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர .(05)



## ஹலால் சான்றுறுதிப் பேரவை செயற்பாடு தொடர்பான தெளிவூட்டல் கருத்தரங்கு

(எம்.எஸ்.எம்.ஸாகிர் )

ஹலால் சான்றுறுதிப் பேரவையின் செயற்பாடுகள் பற்றிய தெளிவூட்டல் கருத்தரங்கு, வெள்ளிக்கிழமை மஃரிப் தொழுகையைத் தொடர்ந்து மாளிகைக்காடு பாவா றோயல் வரவேற்பு மண்டபத்தில் நடைபெற்றது.

அம்பாறை மாவட்ட ஜம் இய்யத்துல் உலமாவின் ஒத்துழைப்புடனும் ஹலால் சான்றுறுதிப் பேரவையின் அனுசரணையிலும் நடைபெற்ற இச்செயலமர்வில், சான்றுறுதிப் பேரவை சார்பாக அதன் பிரதான நிறைவேற்று அதிகாரி ஆகிப் வஹாப், ஹலால் விழிப்புணர்வுப் பொறுப்பாளர் உஸாமா சைத், உள்ளக ஷரீஆ பிரிவுத் தலைவரும் பிரதான வளவாளருமான அஷ்ஷெய்க் இர்பான் முபீன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

'இலங்கையில் ஹலால் சான்றிதழ் வழங்கப்படுவதன் தேவையும் அதன் முக்கியத்துவமும்' எனும் தொனிப்பொருளில் அஷ்ஷெய்க் இர்பான் முபீன்-றஹ்மானி விளக்கமான உரையொன்றை நிகழ்த்தினார்.

அம்பாறை மாவட்ட ஜம் இய்யத்துல் உலமாவின் செயலாளர் அஷ்ஷெய்க் ஏ.எல். நாஸிர் கனி- ஹாமியின் நெறிப்படுத்தலில் நடைபெற்ற இக்கருத்தரங்கில், அம்பாறை மாவட்ட ஜம் இய்யத்துல் உலமாவின் தலைவர் அஷ்ஷெய்க் ஐ.எல். எம். ஹாஷிம் சூரி, மதனி, முன்னாள் தலைவர் அஷ்ஷெய்க் எஸ்.எச். ஆதம்பாவா - மதனி மற்றும் மாவட்ட சபையின் நிறைவேற்றுக் குழு உறுப்பினர்கள், கிளைகளின் செயலாளர்கள், உலமாக்கள், கல்விமான்கள், பள்ளிவாசல் நிருவாகிகள், வர்த்தகர்கள், அரச உத்தியோகத்தர்கள், சட்டத்தரணிகள் என சமூகத்திலுள்ள பல்வேறு மட்டத்தினர் கலந்து பயன்பெற்றதோடு சந்தேகங்களுக்கான தீர்வுகளையும் கேட்டறிந்து கொண்டனர்.

(05)

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## இலங்கையும் ஐ.எஸ்.ஐ.எஸ். உம்

ஐ.எஸ்.ஐ.எஸ் அமைப்புடன் தொடர்புடையவர்கள் இலங்கையில் உள்ளனரா என்பதைக் கண்டறிய விசேட குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதாகவும் தற்போது அவசர விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோன் தெரிவித்துள்ளார்.

இந்தியாவின் குஜராத் மாநிலத்தில் தாக்குதல் நடத்துவதற்குத் தயாராக இலங்கையிலிருந்து அகமதாபாத் நகருக்கு சென்றிருந்த இலங்கை ஐஎஸ்ஐஎஸ் அமைப்பைச் சேர்ந்த நால்வர் அண்மையில் அகமதாபாத் சர்தார் பட்டேல் சர்வதேச விமான நிலையத்தில் கைது செய்யப்பட்டதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.

இதையடுத்துக் கைது செய்யப்பட்டவர்களிடம் விசாரணைகளை நடத்துவதற்காகத் தனிக் குழு ஒன்று இந்தியாவிற்கு அனுப்பப்படுவதாகவும் செய்திகள் வெளியாகின். இதைத் தொடர்ந்து தற்போது, ஐ.எஸ்.ஐ.எஸ் அமைப்புடன் தொடர்புடைய மேலும் பலர் நாட்டில் உள்ளனரா என்பது குறித்து பாதுகாப்பு தரப்பினரால் தற்போது விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுகின்றன என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கு முன்னர் உயிர்த்த ஞாயிறு தினத்தன்று கிறிஸ்தவத் தேவாலயங்கள் மீதும் சொகுசு விடுதிகள் மீதும் நடத்தப்பட்ட தொடர் குண்டு வெடிப்புக்களின் பிரதிபலிப்பாக ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்புத் தொடர்பான அச்சம் நிலவுகின்றது. இப்போது நாட்டுக்குள் ஐ.எஸ்.ஐ.எஸ். உள்ளதா என்கிற வகையில் விசாரணைகள் இடம்பெறுவதாகத் தெரிவிக்கப்படுவது மக்கள் மத்தியில் ஒருவித பீதியைக் கிளப்புகின்றது.

உயிர்த்த ஞாயிறு தாக்குதலை நடத்தியவர்கள் தாங்களும் ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பனர் என்று அடையாளப்படுத்தும் வகையிலான உள்ளூரில் தயாரிக்கப்பட்ட சில குறியீடுகளை வைத்திருந்தனர் எனினும் அவர்களுக்கு ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்புடன் நேரடியான தொடர்புகளோ, நடத்தப்பட்ட தாக்குதலுக்கும் அந்த அமைப்புக்கும் நேரடித் தொடர்புகளோ இருப்பதாக இதுவரையில் நிரூபிக்கப்படவில்லை.

இருப்பினும் இந்தியத் தரப்பில் இருந்து இது தொடர்பாகத் தொடர்ந்தும் செய்திகள் வெளியாகிய வண்ணமே இருக்கின்றன. உயிர்த்த ஞாயிறு தாக்குதலின்போதும் ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்புடன் தொடர்புடைய இலங்கையர்கள் இந்தியாவில் அதற்கு முன்பதாகக் கைது செய்யப்பட்டிருந்தனர் என்று தகவல்கள் தெரிவிக்கப்பட்டிருந்தன. இப்போது மீண்டும் இந்தியாவில் இருந்தே இலங்கையின் ஐ.எஸ்.ஐ.எஸ். தொடர்பு குறித்த செய்திகள் வெளியாகி உள்ளன.

இந்தியாவில் நாடாளுமன்றத் தேர்தல் நடந்துவரும் நிலையிலும் இலங்கையில் தேர்தல்கள் நடக்கவிருக்கும் நிலையிலும் இத்தகைய செய்திகள் பதற்றத்தை அதிகரிக்கின்றன. அதுமட்டுமல்ல உயிர்த்த ஞாயிறு தாக்குதல் இலங்கையின் ஆட்சி மாற்றம் ஒன்றுக்கு வித்திட்ட நிலையில், அதற்காகவே தான் அந்தத் தாக்குதல் திட்டமிட்டு நடத்தப்பட்டது என்கிற குற்றச்சாட்டும்கூட இன்னும் இருக்கின்றது. எனவே தற்போதைய ஐ.எஸ்.ஐ.எஸ். செய்திகளை அதனோடு தொடர்புபடுத்திப் பார்ப்பதும் இயல்பானதே. முன்னைய அனுபவங்களின் அடிப்படையில் சந்தேகங்கள் எழுவதும் இயல்பானதே.

இத்தகைய நிலையில் பரபரப்பைக் கிளப்புவதற்குப் பதில் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதில் காவல்துறை அதிகாரிகளும் பாதுகாப்புத் தரப்பினரும் கவனம் செலுத்துவதே தேவையானது.




# மொசாட் சதியால் ஈரான் அதிபர் படுகொலையா?

## அதிர்ச்சிமிகு இஸ்ரேல் உளவுப் படை தாக்குதல்கள்

- ஐங்கரன் விக்கினேஸ்வரா

அமெரிக்காவின் சிஐஏ (CIA), முன்னைய சோவியத் யூனியனின் கேஜிபி (KGB) ஆகியவற்றை விஞ்சிய உலகின் அதி சக்திவாய்ந்த உளவு அமைப்பாக இன்றும் விளங்குவது இஸ்ரேல் நாட்டின் உளவு அமைப்புதான் மொசாட்.

ஈரான் அதிபர் இப்ராஹிம் ரைசி பயணித்த ஹெலிகாப்டர் விபத்துக்குள்ளானதாக கூறப்பட்டாலும் இஸ்ரேலின் மொசாட் உளவுப்படை சதி செய்து அழித்திருக்கலாம் என்கிற சந்தேகம் வலுவாக இருக்கிறது. ஆனாலும் ஈரான் அதிபர் ரைசியை படுகொலை செய்யவே இல்லை என இஸ்ரேல் சொல்கிறது.



ஈரானை அணுவாயுதம் வைத்திருக்கும் நாடு என்ற போதிலும் தொழில்நுட்பத்தில் மிகவும் பின்தங்கிய ஒரு நாடாகவே நோக்க முடியும். மத அடிப்படையை வைத்து பழமைவாத சிந்தனையுடன் ஈரானுடய வளர்ச்சி பெருமளவில் பின்தங்கியுள்ளது.



ஷியா முஸ்லிம்களான ஈரானிய மக்கள், இவர்களின் மதக்கோட்பாடு சுன்னி முஸ்லிம்களுக்கு முரணாக உள்ளதால், அரபுலகில் பல பகைமைகளை எதிர்நோக்குகின்றனர். மதத்தை முன்னிறுத்தி தொழில்நுப்பத்தில் தோல்விகண்ட நாடாகவே ஈரானை அவதானிக்க முடியும்.

### 1960களில் அமெரிக்கா வழங்கிய ஹெலிக்கொப்டர் :

தற்போது ஈரான் அதிபர் ரைசியின் ஹெலிகாப்டர் விபத்துக்குள்ளானதா அல்லது இஸ்ரேல் சதியால் அழிக்கப்பட்டதா என்கிற சந்தேகங்களுக்கு காரணமே மொசாட்டின் கடந்த கால- நிகழ் கால அதிர்ச்சிகர தாக்குதல்கள்தான்.

ஈரானின் தலைவர் இப்ராகிம் ரைசி பயணித்த உலங்குவானுர்தி 1960களில் கனடா மற்றும் அமெரிக்க இராணுவத்துக்காக தயாரிக்கப்பட்ட பெல் 212 எனப்படும் உலங்கு வானுர்திகளாகும். 1960களில் ஈரானுடன் அமெரிக்கா நப்புறவுடன் இருந்த காலத்தில் 15 வானுர்திகள் அப்போது வழங்கப்பட்டன.

இன்றும் அவை ஈரானின் பயன்பாட்டில் உள்ளன. அவைகளில் ஒன்றில்தான் ரைசா பயணித்தார். 64 வருடங்கள் கடந்த நிலையில் அதைவிட தொழில்நுப்பம் கூடிய எந்த வானுர்தியும் ஈரானிடம் இல்லை.

அதைவிட கொடுமையாதெனில் பெல் 212 வானுர்திகளுக்கு உலகில் உதிரிப்பாகங்களே கிடையாது இப்படியான ஒரு நிலையில்தான் ஈரானின் நிலை உள்ளது.

### பழி வாங்கப்பட்ட ஹிட்லரின் தளபதி :

பல லட்சக்கணக்கான யூதர்களை படுகொலை செய்து இன்றைக்கு இஸ்ரேல் என்ற ஒரு நாடு உருவாகக் காரணமாக இருந்த ஜெர்மனி ஹிட்லரின் இரகசிய பாதுகாப்புப் படை தளபதியாக இருந்தவர் (Adolf Eichmann) ஹைச்மன். பல லட்சம் யூதர்களை கொன்று குவித்ததில் முதன்மைப் பங்காளியாக இருந்தவர்.

இதுவே 1960களில் இஸ்ரேலின் மொசாட் அமைப்பு நடத்திய 'ஒபரேஷன் பினாலே' இன்றைக்கும் உலகை பிரம்மிக்க வைத்தது.

2ஆவது உலகப் போரில் ஜெர்மனி தோற்றுப் போய் ஹிட்லர் இறந்துபோக ஹைச்மன் கதி என்ன என தெரி யாமல்போனது. அவ்வப்போது பிடிபட்டார் என்கிற செய்திகள்தான் வந்தன. இந்தப் பின்னணியில் ஆர்ஜென்டினாவில் பதுங்கியிருக்கிறார் ஹைச்மன் என்ற தகவலை 'யூத' உளவாளிகள் மூலம் பெற்றது மொசாட். பல மாதங்கள் காத்திருந்து ஐக்மனை தூக்கிய மொசாட், ஆர்ஜென்டினாவுக்கு சென்ற இஸ்ரேலிய அமைச்சரின் விமானத்தில் அந்த நாட்டுக்குத் தெரியாமலேயே இஸ்ரேலுக்குக் கொண்டு வந்து தூக்கில் போட்டு பழிதீர்த்தது. ஹைச்மனை பிடிக்க மொசாட் மேற்கொண்ட நடவடிக்கையின் பெயர் ஒபரேஷன் பினாலே.

### பாலஸ்தீன படுகொலைகள் :

ஜெர்மனியின் மியூனிக்கில் 1972இல் ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்கச் சென்ற 11 இஸ்ரேலிய வீரர்களை பாலஸ்தீன விடுதலைப் படை சுட்டுக் கொன்றது. இதற்கு மொசாட் அமைப்பு பழிதீர்க்க மேற்கொண்ட உளவு நடவடிக்கைகள் பயங்கரமானவை.

1970களில் யாசர் அராபத்தின் பாலஸ்தீன விடுதலை இயக்கம்- தீவிரமாக செய்து வந்த காலம். 1977அம் ஆண்டு வரை ஐந்து ஆண்டுகள் இடைவிடாமல் பாலஸ்தீன போராளிக் குழுவின் ஒவ்வொரு தலைவரையும் இலக்கு வைத்து அழித்துக் கொண்டே இருந்தது மொசாட் என்பது பின்னாளில்தான் தெரியவந்தது.

### சிரியாவைச் சிதைக்கச் சதி:

சிரியாவின் துணை பாதுகாப்புச் செயலாளராக

(5ஆம் பக்கம் பார்க்க..)

# சட்டவிரோதக் கருக்கலைப்பு இரு இலங்கையர்கள் கைது

## ஜப்பானில் வைத்து

சட்டவிரோதமாகக் கருக்கலைப்பு செய்த குற்றச்சாட்டில் இரண்டு இலங்கையர்கள் ஜப்பானில் கைது செய்யப்பட்டுள்ளனர் எனத் தகவல் வெளியாகியுள்ளது.

ஜப்பானின் இபராகி பிரதேசத்தில் வசிக்கும் 30 வயதுடைய பெண்ணொருவரும் கருக்கலைப்புக்கு உதவி செய்ததாகக் கூறப்படும் அவரது காதலனுமே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த சட்டவிரோத கருக்கலைப்பின் போது குறித்த பெண் 9 மாத கர்ப்பிணியாக இருந்துள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவர் கடந்த ஏப்ரல் மாதம் 29 ஆம் திகதி அன்று தனது காதலனின் வீட்டில் வைத்து போதைப்பொருள் பயன்படுத்தி சட்டவிரோதமாகக் கருக்கலைப்பு செய்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சந்தேக நபர்கள் இருவரும் கடந்த மார்ச் மாதம் 20 ஆம் திகதி மகப்பேறு தொடர்பான வைத்தியரொருவரை சந்தித்துக் கருக்கலைப்பு செய்யுமாறு கேட்டுக் கொண்டுள்ளதுடன் ஜப்பான் சட்டத்தின் கீழ் கருக்கலைப்பு செய்ய அனுமதிக்கப்பட்ட காலம் கடந்துவிட்டதால் கருக்கலைப்பு செய்ய முடியாது என வைத்தியர் கூறியுள்ளார் எனவும் பொலிஸ் விசாரணைகளில் தெரியவந்துள்ளன. (05)

# அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் சம்மாந்துறையில் சீரமைப்பு நிகழ்வு

(எம். எப். றிபாஸ்)



அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின் சம்மாந்துறை சென்னல் கிராமம் பிரதேசத்தில் கிளைக் குழு அமைக்கப்பட்டது.

அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின் சம்மாந்துறை தொகுதி அமைப்பாளர் ஐ.எல்.எம்.மாஹிர் தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வில் சம்மாந்துறை பிரதேச சபையின் முன்னாள் உதவி தவிசாளர் ஏ. அச்சு முகம்மட், பிரதேச சபையின் முன்னாள் எதிர்க்கட்சி தலைவர் டாக்டர் மஜீட், சபையின் முன்னாள் உறுப்பினர்கள், இளைஞர் அமைப்புக்களின் பிரதிநிதிகள், பிரதேசத்தின் முக்கியஸ்தர்கள் என பலரும் பங்குபற்றியிருந்தனர்.

சுமார் இருபது பேர் கொண்ட நிருவாக சபை உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டதுடன் கிளைக் குழுவின் தலைவராக ஜாஹீரும், இளைஞர் அணித்தலைவராக மாபாஸ/ம் தெரிவு செய்யப்பட்டனர்.

திகாமடுல்ல மாவட்டத்தில் அ.இ. மக்கள் காங்கிரஸ் புனரமைப்பு விடயங்களில் முன்னாள் மாகாண சபை உறுப்பினர் ஐ.எல்.எம். மாஹீர் எடுத்துவரும் முயற்சியை மாவட்ட மக்கள் பெரிதும் பாராட்டுவதோடு எதிர்கலத்தில் இப்பிராந்தியத்தில் ஒரு நாடாளுமன்ற உறுப்பினராக வரவேண்டும் எனவும் மக்கள் எதிர்பார்க்கின்றனர .(05)



# மொசாட் சதியால் ஈரான்...

நியமிக்கப்படக்கூடிய அளவுக்கு செல்வாக்கான நபராக இருந்தவர் கோஹன். அப்படி செல்வாக்கு மிக்க நபருக்கு சிரியாவின் அத்தனை ராணுவ ரகசியங்களும் தெரியும்.

சிரியாவில் கோஹன் என்பவர் தேசத் துரோகி இஸ்ரேலில் ஒரு தேசபக்தர். இஸ்ரேலின் மொசாட் எந்த எல்லைக்கும் ஊடுருவலை மேற்கொள்ளும் என்பதற்கு கோஹன் ஒரு நல்ல உதாரணம்.

இஸ்ரேலுக்கு எதிரான சிரியாவின் தும்மல்கூட மொசாட்டுக்கு சென்று சேர அந்த நாடு ரொம்பவே குழம்பிப் போனது. இதனால் சிரியாவின் 'தோழன்' அன்றைய சோவியத் யூனியன் உதவியை நாடியது.

சோவியத் யூனியன் சந்தேகத்தின் அடிப்படையில் கோஹனை உளவு பார்க்க இறுதியில் கையும் களவுமாகவே அவர் சிக்கிவிட்டார். பின்னர்தான் பல ஆண்டுகளாக மொசாட்டால் வளர்த்தெடுக்கப்பட்டு உருவாக்கப்பட்ட உளவாளி கோஹன் என்பது அம்பலமானது.

இதனால் சிரியா அரசு கோஹனை தூக்கிலிட்டுக் கொன்றது. இஸ்ரேல் தேசபக்த மாவீரனாக அவரைப் போற்றுகிறது.

**ஈரான் அணு விஞ்ஞானிகள் படுகொலைகள்:**

ஈரானின் அணு ஆயுத திட்டங்களை நாசமாக்க, ஈரான் கருவிகளை கொள்முதல் செய்யும் ஐரோப்பாவில் போலி நிறுவனங்களை உருவாக்கியது இஸ்ரேலின் மொசாட். பல்வேறு முறைகேடுகள் மூலம் ஈரான் அரசுடன் நெருங்கி அணுசக்தி திட்டங்களுக்கு போலி கருவிகளை கொடுத்தது மொசாட்.

ஈரானின் அணு விஞ்ஞானிகள் இன்றளவும் அடுத்தடுத்து மொசாட் உளவுப் படையினரால் மர்மமான முறையில் கொலை செய்யப்பட்டுக் கொண்டுதான் இருக்கின்றனர்.

**ஹமாஸ் போரின் காரணம்:**

பாலஸ்தீனத்தில் ஹமாஸ்/டன் மோதுகிறது இஸ்ரேல். இந்த மோதல்களுக்கு அதாவது இஸ்ரேலை ஹமாஸ் வன்மம் தீர்க்க ஒரு காரணம் ஹமாஸின் அறிவியல் தொழில்நுட்ப மூளை- அல் ஸ்வாரியை துனிசியாவில் வைத்து கதையை முடித்ததுதான் எனவும் சொல்லப்படுகிறது.

இத்தகைய அபாயகரமான மொசாட் அமைப்புதான் ஈரான் அதிபர் ரைசி பயணித்த ஹெலிகாப்டரை சதி செய்து அழித்திருக்கும் என வலுவான சந்தேகம் முன்வைக்கப்படுகிறது.

குறிஞ்சி மலை நகர் Kurinchi Hill City

கொழும்பு - மட்டக்களப்பு A4 வீதியில் 190 ஆவது km இல் 800 m தூரத்தில்

பதுளை மாவட்டம் ஹல்துமுல்லை பிரதேச செயலர் பிரிவு

15 பேர்ச் முதல் 40 பேர்ச் வரையான காணித்துண்டுகள் விற்பனைக்கு!

சுற்றுலா விடுதி, விடுமுறை வீடு ஆகியவற்றுடன் தேயிலை, கோப்பி, கறுவா பயிர்ச்செய்கையும்

அருகில் உள்ள சுற்றுலா மையங்கள்
(100கிமீ சுற்றுவட்டாரத்தில்)
பம்பரகந்த, தியலும, துன்கிந்த, இராவணா, ரம்போடை உட்பட 10இற்கும் மேற்பட்ட நீர்வீழ்ச்சிகள்

தேசிய சரணாலயங்கள் மற்றும் பூங்காக்கள்
Horton Plains National Park, Hakgala Botanical Gardens
Victoria Park, Kande Ela Educational Forest Park
Lunugamvehera National Park, Yala National Park
Udawalawe National Park

கதிர்காமம் முருகன் கோவில், சீதா அம்மன் ஆலயம், ரம்போடை ஆஞ்சனேயர் கோவில்



தொடர்புகளுக்கு: 0777 43 5557

தனியான வாகன தரிப்பிட வசதி
முழுமையான 24 மணிநேர பாதுகாப்பு சேவை
தொடர்ச்சியான பராமரிப்பு ஏற்பாடு
மின்சார இணைப்பு ஏற்பாடு - குடிதண்ணீர் வசதி
உணவகம் - உள்ளக விளையாட்டுத்திடல்
தேயிலை, கோப்பி, கறுவா தொழிற்சாலைகள்
சுற்றுலா ஏற்பாடுகள்

பேர்ச் 200,000/-
பரப்பு 20 இலட்சம்

5th Project
இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd




கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக
30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து
வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with
Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with
Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable
in Indian Style
DESSERT
ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
jUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swchpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

# 43 பாகிஸ்தானிய கைதிகளை திருப்பியனுப்புகிறது இலங்கை

பாகிஸ்தானும் இலங்கையும் தங்களது நாடுகளிலுள்ள கைதிகளை அவர்களது தாய்நாட்டிற்கு திருப்பி அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்க ஒப்புக்கொண்டுள்ளன.

பாகிஸ்தானுக்கான இலங்கை உயர் ஸ்தானிகர் ஓய்வு பெற்ற அட்மிரல் ரவீந்திர சந்திர ஸ்ரீவிஜய் குணரத்ன மற்றும் உள்நாட்டு அமைச்சர் மொஹ்சின் நக்விக்கும் இடையில் பாகிஸ்தானில் நடைபெற்ற கலந்துரையாடலில் இந்த புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்த சந்திப்பில் பரஸ்பர நலன் மற்றும் இருதரப்பு உறவுகளின் மேம்பாடு குறித்து கலந்துரையாடப்பட்டதோடு, பாதுகாப்பு மற்றும் போதைப்பொருள் தடுப்பு ஒத்துழைப்பை அதிகரிக்க இரு தரப்பினரும் ஒப்புக்கொண்டன.

43 கைதிகளை பாகிஸ்தானுக்கு திரும்ப அழைத்து வருவதற்கு இலங்கை அதிகாரிகளுடன் அந்நாட்டு உள்விவகார அமைச்சகம் கடந்த ஒரு மாதமாக முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது.

இவ்விவகாரத்தில் இலங்கை உயர்ஸ்தானிகர் சகலவிதமான ஒத்துழைப்பையும் வழங்குவதாக உறுதியளித்துள்ளார். கைதிகளை திருப்பி அனுப்புவதற்கு ஆதரவளித்த இராஜதந்திரிக்கு உள்விவகார அமைச்சர் நன்றி தெரிவித்துள்ளார். (05)

# ஹப்புத்தளையில் வீட்டின் மீது மரம் முறிந்து வீழ்ந்ததில் பெண் இறப்பு இருவர் படுகாயம்

*ஹப்புத்தளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பங்கெடிய வைத்திய சாலைக்கு அருகில் சனிக்கிழமை இரவு சுமார் 7.30 மணியளவில் மரம் ஒன்று முறிந்து வீட்டின் மீது விழுந்ததில் 65 வயதுடைய பெண் ஒருவர் சம்பவ இடத்திலேயே பலியானார் என ஹப்புத்தளை பொலிஸார் தெரிவித்தனர்.*

*குறித்த சம்பவத்தில் 80 வயதுடைய ஆண் ஒருவரும் 73 வயதுடைய பெண் ஒருவரும் பலத்த காயமடைந்த நிலையில் பங்கெடிய ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டதன் பின்னர் மேலதிக சிகிச்சைகளுக்காக தியத்தலாவ வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டு அங்கு சிகிச்சை பெற்று வருகின்றனர் என பொலிஸார் தெரிவித்தனர்.*

*மேற்படி சம்பவத்தில் மரணித்த பெண் மரம் முறிந்து விழுந்த வீட்டில் சுமார் 20 வருட காலமாக வீட்டு வேலை பணியில் ஈடுபட்டு வருபவர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.*

*வீட்டின் மீது மரம் முறிந்து விழுகையில் குறித்த பெண் வீட்டில் சமையலில் ஈடுபட்டிருந்தார் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.*

*மேலதிக விசாரணைகளை ஹப்புத்தளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)*



# வெசாக் பண்டிகையை முன்னிட்டு நாய்க் குட்டிகள் தானம் வழங்கல்

வெசாக் பண்டிகையை முன்னிட்டு பாணந்துறை பிரதேசத்தில் நாய்க் குட்டிகள் தானமாக வழங்கப்பட்டுள்ளன.

வீதியோரங்களில் உள்ள ஆதரவற்ற நாய்க் குட்டிகளே இவ்வாறு தானமாக வழங்கப்பட்டுள்ளன.

இந்த நாய்க் குட்டிகளானவை சட்டரீதியான முறையில் பொதுமக்களுக்குத் தானமாக வழங்கப்பட்டுள்ளன.

இந்த வெசாக் தானத்தை ஏற்பாடு செய்திருந்த குழுவின் உறுப்பினர் ஒருவர் தெரிவிக்கையில் -

நாங்கள் கடந்த 4 வருட காலமாக பாணந்துறையில் உள்ள வீதியோரங்களில் காணப்படும் ஆதரவற்ற நாய்களுக்கு உணவளித்து வருகின்றோம். இதனை நாங்கள் கொரோனா தொற்று ஏற்பட்ட காலத்திலிருந்து தொடர்ச்சியாக மேற்கொண்டு வருகின்றோம்.

இந்நிலையில், கடந்த சில நாள்களாக பெரும்பாலான நாய்க்குட்டிகளை விகாரைகளில் விட்டுச் செல்கின்றனர்.

நாங்கள் இந்த நாய்க் குட்டிகளுக்குத் தினமும் உணவு கொடுத்தாலும் இவற்றிற்கு நிரந்தரமான வீடுகளோ உரிமையாளர்களோ இல்லை. எனவே இந்த ஆதரவற்ற நாய்க் குட்டிகளை பொதுமக்களுக்கு வெசாக் தானமாகப் வழங்க நாங்கள் அனைவரும் தீர்மானித்தோம். - என்றார். (05)



## மழைக்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கூடிய பலத்த காற்றினால் மரம் முறிந்து விழல் மற்றும் மண்மேடு சரிதல் உள்ளிட்ட விபத்துக்களினால் இதுவரை 12207 குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் 45509 பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன், இதுவரை 08 பேர் உயிரிழந்துள்ளதுடன், 13 பேர் காயமடைந்துள்ளனர். 12 வீடுகள் முழுமையாகவும், 3166 வீடுகள் பகுதியளவிலும் சேதமடைந்துள்ளன.

மன்னார் தொடக்கம் கொழும்பு மற்றும் காலி ஊடாக ஹம்பாந்தோட்டை வரையான கரையோரத்திற்கு மேலான கடற்பரப்புகளில் அவ்வப்போது மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது. இக் கடற்பரப்புகளில் சில இடங்களில் பலத்த மழைவீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகின்றது. அத்துடன் நாட்டைச் சூழவுள்ள ஏனைய கடற்பரப்புகளில் சில இடங்களில் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

தென்மேல் பருவப்பெயர்ச்சி நிலைமை காரணமாக நாடு முழுவதும் தற்போது நிலவும் மழை நிலைமையும் காற்று நிலைமையும் மேலும் தொடரும். மேல், சப்ரகமுவ, மத்திய, வடமேல் மற்றும் தென் மாகாணங்களில் அவ்வப்போது மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

சப்ரகமுவ மாகாணத்திலும், நுவரெலியா மாவட்டத்திலும் சில இடங்களில் 100 மி.மீ க்கும் அதிகமான பலத்த மழைவீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகின்றது. மேல் மற்றும் வடமேல் மாகாணங்களிலும் கண்டி, காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் சில இடங்களில் 75 மி.மீ அளவான ஓரளவு பலத்த மழைவீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகின்றது. வடக்கு மற்றும் வடமத்திய மாகாணங்களில் பல தடவைகள் மழை பெய்யும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

மத்திய மலைநாட்டின் மேற்கு சரிவுப் பகுதிகளிலும் வடக்கு, வடமத்திய, மேல், தென் மற்றும் வடமேல் மாகாணங்களிலும் திருகோணமலை மாவட்டத்திலும் அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 50-60 கிலோ மீற்றர் வரையான வேகத்தில் பலத்த காற்று வீசக் கூடிய சாத்தியம் காணப்படுவதுடன் நாட்டின் ஏனைய பிரதேசங்களில் அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 30-40 கிலோ மீற்றர் வரையான வேகத்தில் ஓரளவு பலத்த காற்று வீசக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

இடியுடன் கூடிய மழை பெய்யும் வேளைகளில் அப் பிரதேசங்களில் தற்காலிகமாகப் பலத்த காற்றும் வீசக்கூடும். மின்னல் தாக்கங்களினால் ஏற்படக்கூடிய பாதிப்புகளைக் குறைத்துக்கொள்ளத் தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளுமாறு அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் பொதுமக்களுக்கு அறிவுறுத்தியுள்ளது.

நாட்டைச் சூழவுள்ள கடற்பரப்புகளில் காற்றானது தென்மேற்கு திசையிலிருந்துவீசக் கூடும் என எதிர்பார்க்கப்படுகின்றது. மன்னார் தொடக்கம் கொழும்பு, காலி மற்றும் ஹம்பாந்தோட்டை ஊடாக பொத்துவில் வரையான கரையோரத்திற்கு மேலான கடற்பரப்புகளில் காற்றின் வேகமானது மணித்தியாலத்துக்கு 40-50 கிலோ மீற்றர் வரை வீசக்கூடுவதுடன், இக் கடற்பரப்புகளில் காற்றின் வேகமானது அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 60-70 கிலோ மீற்றர் வரை அதிகரிக்கக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

நாட்டைச் சூழவுள்ள ஏனைய கடற்பரப்புகளில் காற்றின் வேகமானது மணித்தியாலத்துக்கு 30-40 கிலோ மீற்றர் வரை காணப்படுவதுடன் இக் கடற்பரப்புகளில் காற்றின் வேகமானது அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 50-60 கிலோ மீற்றர் வரை அதிகரிக்கக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

மன்னார் தொடக்கம் கொழும்பு, காலி மற்றும் ஹம்பாந்தோட்டை ஊடாக பொத்துவில் வரையான கரையோரத்திற்கு மேலான கடற்பரப்புகள் அவ்வப்போது மிகவும் கொந்தளிப்பாகக் காணப்படும் என எதிர்பார்க்கப்படுவதுடன், கடலில் பயணம் செய்வோரும் மீனவ சமூகமும் இக் கடற்பரப்புகளில் மறு அறிவித்தல் வரை நடவடிக்கைகளில் ஈடுபடுவதைத் தவிர்த்துக் கொள்ளுமாறு அறிவுறுத்தப் படுகின்றார்கள்.

நாட்டைச் சூழவுள்ள ஏனைய கடற்பரப்புகள் அவ்வப்போது கொந்தளிப்பாகக் காணப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது. எனவே இக் கடற்பரப்புகளில் கடலில் பயணம் செய்வோரும் மீனவ சமூகமும் இவ்விடயம் தொடர்பாக அவதானமாக இருக்குமாறு அறிவுறுத்தப்படுகின்றார்கள்.

மன்னார் தொடக்கம் கற்பிட்டி, கொழும்பு, காலி மற்றும் ஹம்பாந்தோட்டை ஊடாக பொத்துவில் வரையான கடற்பரப்புகளில் கரையோரத்தை அண்டிய பகுதிகளில் கடல் அலைகள் 2.5 - 3.0 மீற்றர் உயரம் வரை (இது கரைக்கு வரும் அலைகளின் உயரம் அல்ல) மேலெழும்பக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது. இடியுடன் கூடிய மழை பெய்யும் நேரங்களில் கடற்பகுதிகளில் அவ்வப்போது பலமான காற்று வீசுவதுடன் அக்கடற்பிரதேசங்கள் மிகவும் கொந்தளிப்பாகவும் காணப்படும். ஆகவே இக்கடற்பரப்பில் மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபடுவதைத் தவிர்த்துக் கொள்ளுமாறு வளிமண்டலவியல் திணைக்களம் மீனவர்களிடம் வலியுறுத்தியுள்ளது.

நிலவும் சீரற்ற காலநிலையால் கொழும்பு, களுத்துறை, கம்பஹா, கண்டி, கேகாலை, நுவரெயிலா மற்றும் இரத்தினபுரி ஆகிய மாவட்டங்களுக்கு விடுக்கப்பட்டுள்ள மண்சரிவு அபாய எச்சரிக்கை தொடர்ந்து நீடிக்கப்பட்டுள்ளது.

இப்பகுதிகளில் 24 மணித்தியாலங்களில் மழைவீழ்ச்சி 75 மி.மீற்றர்களை மேவியுள்ளதால் (அதிகரித்துள்ளதால்) மழை தொடருமாயின் மண்சரிவு, சாய்வு இடிந்து விழுகை, பாறை விழுகை, நிலவெட்டுசாய்வு இடிந்து விழுகை மற்றும் தரை உள்ளிறக்கம் என்பனவற்றுக்கான சாத்தியம் காணப்படுகிறது.

24 மணித்தியாலங்களில் மழைவீழ்ச்சி 100 மி.மீற்றர்களை மேவியுள்ளதனால்; மழை தொடருமாயின் மண்சரிவு, சாய்வு இடிந்து விழுகை, பாறை - விழுகை மற்றும் தரை - உள்ளிறக்கம் என்பவற்றுக்கான சாத்தியம் காணப்படுகிறது. ஆகவே பொதுமக்கள் அவதானத்துடன் செயற்படவேண்டும் என கட்டிட ஆராய்ச்சி மத்திய நிலையம் குறிப்பிட்டுள்ளது

## ரணிலுக்கு.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டார்கள். அவர்கள் வட மாகாணத்தில் கடமையாற்ற நியமனம் வழங்கப்பட்டுள்ளது. மேலும் 566 பேருக்கு நியமனம் வழங்க அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

மல்லாவி நீர்வழங்கும் திட்டம் அண்மையில் ஆரம்பிக்கப்பட்டது. இந்தத் திட்டத்தின் ஊடாக 40 ஆயிரம் குடும்பங்கள் நன்மை அடையும். பொருளாதார நெருக்கடி நிலையிலும் உலக வங்கியுடன் ஒப்பந்தம் செய்து இதனை ஆரம்பிக்க ஜனாதிபதி நடவடிக்கை எடுத்தார். அதற்காக இந்த மாகாண மக்கள் சார்பில் எமது விசேட நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வனவள மற்றும் வனஜீவராசிகள் திணைக்களம் என்பவற்றினால் 1985 ஆம் ஆண்டுக்குப் பின்னர் உள்வாங்கப்பட்ட 50 ஆயிரம் ஏக்கர் காணிகளை விடுவிக்கவும் அனுமதி கிடைத்துள்ளது. இங்குள்ள மக்களின் பிரச்சினைகளை ஆராய்ந்து அவற்றைத் தீர்ப்பதற்கான நடவடிக்கைகளை ஜனாதிபதி ஒவ்வொரு நாளும் எடுத்துவருகிறார். யாழ். மாவட்டத்திலுள்ள பல முக்கிய இடங்களை சுற்றுலா மையங்களாக மாற்றவும் ஜனாதிபதி பணிப்புரை வழங்கியுள்ளார்.

வடக்கில் ஒரு சில நாட்கள் தங்கியிருந்து மக்களின் பிரச்சினைகளை கேட்டறிந்து தீர்வு வழங்க ஜனாதிபதி நடவடிக்கை எடுத்து வருகிறார். அதற்கு நாம் நன்றியுடையவர்களாக இருக்க வேண்டும் என்றார்.

## எமது....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிலையத்தை மாங்குளம் ஆதார வைத்தியசாலையில் நேற்று திறந்து வைக்கும் நிகழ்வில் உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

இந்தப் பிரிவு இந்த வன்னி மாவட்டத்திற்கு கிடைத்த மிகப்பெரிய வரப்பிரசாதமமாகும். இதற்காக முயற்சித்த அனைவருக்கும், குறிப்பாக எமது ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கு நான் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். வட மாகாணத்துக்கே ஒருபெரும் வளமாக இதனைப் பெற்றிருக்கின்றோம். இந்த வளம் தொடர்ச்சியாகப் பேணப்படவேண்டும். அதற்கு நாம் அனைவரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும். இந்த வைத்தியசாலை மிகச் சிறப்பாக நடைபெற அவசியமான அனைத்து வளங்களையும் நீங்கள் வழங்க வேண்டும் என்ற கோரிக்கையை ஜனாதிபதியிடம் நான் முன்வைக்கிறேன் - என்றார்.

## தனித்துப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இருந்த இடத்துக்குச் சென்று அவர்களின் பிரச்சினை என்னவென்று வினவினார். அவரிடம் தமது பிரச்சினையை விளக்கிய இரு பெண்களும் தமது பிரச்சினையை ஜனாதிபதியிடம் நேரில் முன்வைக்க வேண்டும் எனக் குறிப்பிட்டனர்.

அதனையடுத்து, வடமாகாண ஆளுநரால் இதுகுறித்து ஜனாதிபதிக்கு அறிவிக்கப்பட்டது, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க போராட்டம் நடைபெற்ற இடத்துக்குச் சென்று அவர்களின் பிரச்சினைகளைக் கேட்டறிந்தார்.

காணிப் பிரச்சினை காரணமாக தாம் உட்பட கேப்பாப்பிலவு கிராமத்தில் வசிக்கும் 56 குடும்பங்கள் கடும் அழுத்தங்களுக்கு உள்ளாகியுள்ளன எனவும், எனவே இதற்கு உடனடியாகத் தீர்வு காண ஏற்பாடு செய்யுமாறும் குறித்த பெண்கள் ஜனாதிபதியிடம் வேண்டுகோள் விடுத்தனர்.

இதற்குப் பதிலளித்த ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, இந்தப் பிரச்சினையை விரைவாகக் கண்டறிந்து அதற்குத் தீர்வுகாணுமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அறிவிப்பார் என்று தெரிவித்தார்.

அத்துடன், வடமாகாணத்தில் பெருமளவிலான காணிகளை விடுவிக்க ஆளும் தரப்பு ஏற்கனவே நடவடிக்கை எடுத்துள்ளதாகவும், எஞ்சியுள்ள காணிப் பிரச்சினைகளுக்கு விரைவில் தீர்வு காண்பதே தமது எதிர்பார்ப்பு எனவும் குறிப்பிட்டார்.

## தேர்தலில் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அநுரகுமார திஸாநாயக்கவுக்கும் இடையில் பகிரங்க விவாதம் இடம்பெறும்போது அன்றையதினம் விடுமுறை வழங்க வேண்டும். இவ்விருவரின் விவாதத்தை நாட்டு மக்கள் பொறுமையாக அமர்ந்து பார்க்க வேண்டும். விவாதத்தைப் பார்த்ததன் பின்னர் நாட்டு மக்கள் எவரும் இவ்விருவருக்கும் வாக்களிக்கமாட்டார்கள்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நிச்சயம் தேர்தலில் போட்டியிடுவார். இன்னும் ஒருமாத காலத்துக்குள் ஜனாதிபதி தனது நிலைப்பாட்டை அறிவிப்பார். தேர்தலில் போட்டியிட்டு வெற்றிப் பெற வேண்டும் என்ற நிலைப்பாட்டில் ஜனாதிபதி உறுதியாக உள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலுக்கான உத்தியோகபூர்வ அறிவிப்பு வெளியானதும் ஐக்கிய தேசியக் கட்சியின் 10 அல்லது 15 உறுப்பினர்கள் ஜனாதிபதியுடன் ஒன்றிணைவார்கள் என்பதை உறுதியாகக் குறிப்பிடலாம். நான் குறிப்பிடுவது நடைபெறாவிடின் என்னைக் கேலி செய்யலாம்.

நாடாளுமன்ற உறுப்பினர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகாவை பலவீனப்படுத்துவதற்காகவே எதிர்க்கட்சித் தலைவர் ஓய்வுபெற்ற இராணுவ அதிகாரிகளை ஐக்கிய மக்கள் சக்திக்குள் இணைத்துக் கொள்கிறார். கட்சியை உருவாக்க சரத் பொன்சேகா அர்ப்பணிப்புடன் செயற்பட்டுள்ளார். எதிர்க்கட்சித் தலைவரின் தான்தோன்றித்தனமான செயற்பாடுகளினால் ஐக்கிய மக்கள் சக்தி முழுமையாக இல்லாதொழியும் என்றார்.







காலைக்கதிர் Kalaikkathir

# மருத்துவப் படிப்பை முடித்தவர்கள் 3 வருடங்களாவது தமது சொந்த மாகாணத்தில் சேவையாற்றவேண்டும்

## அமைச்சர் டக்ளஸ் வலியுறுத்து



வைத்தியர்கள் தமது பட்டப்படிப்பை முடித்த பின்பு குறைந்தது மூன்று வருடமாவது தமது மாகாணத்தில் சேவையாற்ற வேண்டும் என்று தெரிவித்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, ஜனாதிபதியின் ஆலோசனைக்கு அமைவாக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையை தேசிய வைத்தியசாலையாக தரமுயர்த்த அடுத்துவரும் அமைச்சரவையில் பத்திரமொன்றை சமர்பிக்கவுள்ளதாகவும் கூறியுள்ளார்.

பெண்கள் மருத்துவம் மற்றும் பராமரிப்புக்கான சிறப்பு நிலையத்தின் திறப்பு விழாவில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதன்போது மேலும் உரையாற்றிய அமைச்சர் -

நெதர்லாந்து அரசாங்கத்தின் இலங்கைக்கான இலகு கடன் உதவியாக ஷரூபா 50,320 மில்லியன் ஷரூபா செலவில் இந்த நிலையமானது கச்சிதமாக அமைக்கப்பட்டுள்ளது.

பெண்கள் மற்றும் கர்ப்பவதிகளுக்கான அவசர சிகிச்சை பிரிவு, அதிதீவிர சிகிச்சை பிரிவு, குழந்தைகளுக்கான விசேட சிகிச்சை பிரிவு, இரண்டு சத்திர சிகிச்சை கூடங்கள், இரண்டு கர்ப்பவதிகளுக்கான விடுதிகள், பெண் நோய்கள் விடுதி, தொற்றுநீக்கம் பிரிவு, செயற்கை கருத்தரிப்பு இரசாயன கூடம், கதிரியக்கவியல் பிரிவு என இந்த வைத்திய நிலையம் அமையப் பெற்றுள்ளது.

அத்துடன், இங்கு சூரிய மின்சக்தி வசதி மற்றும் மின்பிறப்பாக்கி வசதிகள் உள்ளன எனவும் கூறப்படுகிறது.

இது கிளிநொச்சி வாழ் மக்களுக்கு மாத்திரமல்லாது வடக்கு மாகாண மக்களுக்கு ஒரு வரப்பிரசாதமாக அமையும் என்று நான் நம்புகின்றேன்.

இதேவேளை ஜனாதிபதியால் யாழ்ப்பாணத்தில் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீடத்துக்கான மருத்துவ பயிற்சிகள் மற்றும் ஆராய்ச்சிக்கான தொகுதி ஒன்று திறக்கப்பட்டது. அதுவும் பல வசதிகளை கொண்டதாக இருக்கின்றது.

அங்கு, யாழ். போதனா வைத்தியசாலையை தேசிய வைத்தியசாலையாக்குமாறு ஒரு கோரிக்கை அவரிடம் விடுக்கப்பட்டது. ஆனால், அதற்கு முன்பே ஜனாதிபதி என்னோடு அருகில் இருந்து உரையாடிக்கொண்டிருக்கும்போது அந்த விடயத்தை கூறி, அடுத்துவரும் அமைச்சரவையில் என்னை அதற்கான பொறிமுறைகளை முன்னெடுக்குமாறு கேட்டிருக்கிறார்.

அந்த வகையில் அதை நான் முன்னெடுக்கவிருக்கின்றேன்.

அத்துடன் அப்படியான எண்ணம் அவருக்கு இருந்தமையையிட்டு அவருக்கு நான் எமது மக்கள் சார்பில் வாழ்த்துக்களையும் நன்றிகளையும் இந்த சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொள்கின்றேன் என்றும் தெரிவித்துள்ளார்.

2005ஆம் ஆண்டு ரணில் விக்ரமசிங்க ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட்டிருந்தபோது தமிழ் மக்கள் அன்றே அவருக்கு அந்த வாய்ப்பை கொடுத்திருந்தால் இன்று தமிழ் மக்களின் வாழ்வியல் சிறப்பானதாக அமைந்திருக்கும். ஆனால், அன்று தவறவிட்டுவிட்டோம். ஏனென்றால், தமிழ் மக்களது வாக்குகள் ஊடாகத்தான் ஜனாதிபதி ஒருவர் வெல்லக்கூடிய வாய்ப்பு 2005இல் இருந்தது.

அன்று அந்த வாய்ப்பு ரணில் விக்ரமசிங்கவுக்கு கொடுக்கப்பட்டிருந்தால் இந்த பாழாய்ப்போன யுத்தமோ அல்லது இத்தனை துன்பங்கள், துயரங்கள், இடம்பெயர்வுகளையோ எமது மக்கள் சந்தித்திருக்க மாட்டார்கள்.

அதேவேளை, எமது மக்களுக்கு தற்போதும் ஜனாதிபதி தேர்தல் என்ற வாய்ப்பு கிடைக்கவுள்ளது.

அந்த வாய்ப்பை பயன்படுத்தி நாங்கள் இன்றைய ஜனாதிபதியுடன் சேர்ந்து பயணிப்பதன் ஊடாக நாடும் எங்களுடைய மக்களும் அதிக பயன்களை பெறலாம்.

இதேநேரம் நான் அடிக்கடி கூறி வருவதுபோன்று, இந்த நாடு பொருளாதார ரீதியாக அதல பாதாளத்தில் விழுந்து கொண்டிருந்தபோது தென்னிலங்கை தலைவர்கள் பலரிடம் நாட்டை பொறுப்பெடுக்குமாறு கோரிக்கை விடுத்தபோது அவர்கள் எவரும் அதை பொறுப்பெடுக்க முன்வரவில்லை. ஆனால், ஜனாதிபதி ரணில் அதை பொறுப்பெடுக்க முன்வந்தார்.

நான் அவருக்கு சொல்வதுண்டு... நீங்கள் ஒரு பிஸ்ரலோடு வந்து இன்று மல்டிபள் ஆற்றலோடு இருக்கின்றீர்கள் என்று.

உங்களுக்கு தெரியும், இந்த நாட்டை ஜனாதிபதி பொறுப்பெடுத்தபோது தென்னிலங்கையில் அராஜகம் தலைவிரித்தாடியது. அதை தொடர விட்டிருந்தால் அது வடக்கு கிழக்குக்கும் பரவியிருக்கும்.

அதேவேளை எடுத்ததற்கெல்லாம் வரிசையில் தான் நின்று பொருள்களை பெறக்கூடிய நிலைமை இருந்தது. ஆனால், கடந்த இரண்டு வருடங்களுக்குள் ஜனாதிபதி தன்னுடைய ஆற்றலால், தன்னுடைய செயற்பாட்டால் எங்களுக்கு நல்லதொரு சூழ்நிலையை உருவாக்கி தந்திருக்கிறார். அதனால் அவருக்கு நாங்கள் இன்னும் ஒரு சந்தர்ப்பத்தை கொடுக்க வேண்டும் என்று நான் கோரிக்கை முன்வைக்கின்றேன்.

இதேவேளை எனக்கு முன்னால் பேசிய நண்பர்கள் சுமந்திரன் மற்றும் சித்தார்த்தன் ஆகியோரும் ஜனாதிபதியின் செயற்பாட்டை பாராட்டியிருக்கிறார்கள்.

அந்த வகையில், எதிர்வரும் காலங்களிலும் அந்த சந்தர்ப்பத்தை ரணில் விக்ரமசிங்கவுக்கு கொடுப்பதன் ஊடாகவும் அவரோடு சேர்ந்து பயணிப்பதற்கு ஊடாகவும் எமது மக்கள் எதிர்கொள்கின்ற பிரச்சினைகளில் இருந்து வெளியில் வரலாம் என்று நினைக்கின்றேன்.

மேலும், அரசியல் உரிமைப் பிரச்சினை தொடர்பில் நீண்ட காலமாக எனது கருத்துக்களை நான் பதிந்து வந்திருக்கிறேன்.

அரசியல் உரிமை பிரச்சினை என்பது நான் நீண்ட காலமாக சொல்லிவந்த இலங்கை, இந்தியா ஒப்பந்தத்தில் இருந்து ஆரம்பிப்பது. ஆனால், துரதிர்ஷ்டவசமாக தமிழர் தரப்பு விட்ட தவறுகளால் என்ன நடந்தது என்பதையும் நீங்கள் அறிவீர்கள்.

இதேவேளை, நேற்று திறந்துவைக்கப்பட்ட யாழ். மருத்துவ பீட கட்டடம், ஷதிறந்துவைக்கப்பட்ட கிளிநொச்சி வைத்தியசாலை உள்ளிட்ட ஏனைய வைத்தியசாலைகளில் பல்வேறு பற்றாக்குறைகள், ஆளணி பற்றாக்குறைகள் இருக்கின்றன.

அவற்றையும் நிவர்த்தி செய்யுமாறு ஜனாதிபதியின் கவனத்துக்கு நான் கொண்டு வந்திருக்கிறேன். நான் மாத்திரம் இல்லை. சக நாடாளுமன்ற உறுப்பினர்களும் இது தொடர்பில் ஜனாதிபதியிடம் கொண்டுசென்றிருக்கின்றனர். அதற்கும் ஜனாதிபதி நிச்சயம் தீர்வு பெற்றுத் தருவார் என்று நம்புகின்றேன்.

அத்தோடு இந்தியாவோடும் ஒரு நெருக்கமான நிலத் தொடர்பை ஏற்படுத்த வேண்டும் என்றொரு அற்புதமான கொள்கையை ஜனாதிபதி முன்வைத்திருக்கிறார். அதனால் அவரோடு சேர்ந்து பயணிப்பதன் ஊடாக நாம் விரைவில் கடந்த காலங்களிலிருந்து எமது வரலாற்றை மாற்றியமைக்கக்கூடியதாக இருக்கும்.

இதேவேளை தமிழ் பிரதிநிதிகள் அரசாங்கத்தோடு பேச்சு நடத்துவார்கள். பின்பு தேர்தல் வந்த உடனே அரசாங்கம் தங்களை ஏமாற்றிவிட்டது என்று சொல்வதுண்டு. ஆனால், என்னை பொறுத்தவரையில் நான் அப்படி சொல்லப் போவதில்லை. இதை நான் அரசாங்கத்தோடு பேசி இணக்கப்பாட்டை ஏற்படுத்தி, நிச்சயம் பெற்றுத் தருவேன்.

இறுதியாக தமிழ் மொழியில் படிக்கின்ற வைத்திய மாணவர்களுக்கு நான் இந்த சந்தர்ப்பத்தில் ஒன்றை சொல்லிக்கொள்ள விரும்புகின்றேன்.

அவர்கள் படிக்கின்றபோது உணர்ச்சிவசமான கருத்துக்களையும் கொள்கைகளையும் முன்வைப்பார்கள். படித்து முடித்த பின்னர் பட்டதாரிகள் ஆகின்றபோது அவர்களில் பெரும்பான்மையானவர்கள் தென்னிலங்கை சென்று தங்களது மேல் கல்வியை தொடர வேண்டும் என்ற எண்ணத்தோடு இருக்கின்றார்கள்.

அதனால் தயவுசெய்து நீங்கள் உங்களுடைய பட்டப்படிப்பை முடித்த பின்பு குறைந்தது மூன்று வருடமாவது இந்த மாகாணத்தில் சேவையாற்ற வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கின்றேன் என்று தெரிவித்திருந்தார்.

முன்பாக நெதர்லாந்து அரசின் நிதிப் பங்களிப்புடன் கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையில் நிர்மாணிக்கப்பட்ட பெண்கள் சிகிச்சை பராமரிப்பு பிரிவுக்கான கட்டடத் தொகுதியை ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க திறந்துவைத்தார்.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் பிரசன்னத்துடன் 5320 மில்லியன் செலவில் நிர்மாணிக்கப்பட்ட குறித்த கட்டடத் தொகுதி முற்பகல் 10 மணியளவில் ஜனாதிபதியால் சம்பிரதாயபூர்வமாக திறந்துவைக்கப்பட்டு மக்களின் பாவனைக்கு கையளிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இதனிடையே கிளிநொச்சி சென்றிருந்த ஜனாதிபதி மற்றொரு நிகழ்வாக 'உறுமய' உரித்து வேலைத்திட்டத்தின் கீழ் கிளிநொச்சி மாவட்டத்தின் அனைத்து பிரதேச செயலகங்களையும் உள்ளடக்கி இலவச காணி உறுதிப் பத்திரங்கள் வழங்கும் நிகழ்வு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தலைமையில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் பிரசன்னத்துடன் சனிக்கிழமை கிளிநொச்சியில் நடைபெற்றது.

யுத்தம் நிறைவுக்கு வந்த பின்னர் வடக்கு மாகாணத்தில் காணி உரிமம் மற்றும் அது தொடர்பில் பல்வேறுபட்ட பிரச்சினைகளுடன் வாழ்ந்துவரும் மக்களின் பிரச்சினைகளுக்கு நிரந்தர தீர்வு காணவேண்டும் என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா முன்னெடுத்து வந்த கடும் முயற்சிகளுக்கு தற்போது ஜனாதிபதியால் முன்னெடுக்கப்பட்டுள்ள உரிமம் திட்டத்தின் ஊடாக தீர்வு கிடைத்துள்ளது.

இதனடிப்படையில் கிளிநொச்சி மாவாட்டத்தில் 1000 பயனாளிகளுக்கு காணி உரிமங்கள் வழங்கிவைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (05)

# மார்க்ஸ்மேன் விளையாட்டு கழக 2024 மேலங்கி அறிமுக நிகழ்வு






(கே எ ஹமீட்)

மார்க்ஸ்மேன் விளையாட்டு கழகத்தின் தலைவரும், ஊடகவியலாளருமான றிசாத் ஏ காதர் தலைமையில் அட்டாளைச்சேனை ஹனீபா ஹாஜியார் விடுதியில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கல்முனை மாநகரசபையின் முன்னாள் மேயர் சிராஸ் மீராசாஹிப் கலந்து சிறப்பித்திருந்தார்.

மார்க்ஸ்மேன் விளையாட்டுக் கழகத்தால் நடாத்தப்பட்ட இந்நிகழ்வில் மாவட்ட மெய்வல்லுநர் பயிற்றுவிப்பாளராக இருந்து ஓய்வு நிலையடைந்த எஸ்.எல்.தாஜுதீன் பொன்னாடை போர்த்தி, நினைவுச் சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

மேலும், க.பொ.த.உயர் தரப் பரீட்சையில் சித்திபெற்று சுதேச மருத்துவத் துறைக்கு தெரிவுசெய்யப்பட்ட என்.பாத்திமா சப்ராவுக்கான கௌரவமும் வழங்கிவைக்கப்பட்டது.

அத்துடன் பிரதம அதிதியும், முன்னாள் மேயருமான சிராஸ் மீராஷாஹிப், இனாயா மார்கெட்டிங் முகாமைத்துவப் பணிப்பாளர் எம்.சமீல் ஆகியோர் கழகத்தால் பொன்னாடை போர்த்தி நினைவுச் சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

குறித்த மேலங்கிக்கான அனுசரணையை இனாயா மார்கெட்டிங் நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் எம்.சமீல் வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

(05)

காலைக்கதிர் Kalaikkathir

# ஆறுமுகன் தொண்டா காட்டிய வழியில் இ.தொ.கா. தொடர்ந்தும் பயணிக்கும்

## கட்சித் தலைவர் செந்தில் தொண்டமான் திடசங்கற்பம்







(எச் எம் ஹலால்தீன் )

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸை சரியான பாதையில் வழிநடத்தி அதற்கு மகுடம் சூடியவரே அமரர் ஆறுமுகன் தொண்டமான் என இ.தொ.காவின் தலைவரும் கிழக்கு மாகாண ஆளுநருமான செந்தில் தொண்டமான் விடுத்துள்ள சிரார்த்த தின செய்தியில் தெரிவித்துள்ளார்.

அமரர் ஆறுமுகன் தொண்டமானின் 4 ஆவது சிரார்த்த தினத்தை முன்னிட்டு செந்தில் தொண்டமான் விடுத்துள்ள சிரார்த்த தின செய்தியில் மேலும் கூறியுள்ளவை வருமாறு -

அமரர் ஆறுமுகன் தொண்டமான் மலையக மக்களுக்கும் முழு மலையகத்துக்கும் பாதுகாப்பாக திகழ்ந்தவர். சமரசமின்றி மலையக மக்களிக்களின் உரிமைகளுக்காக குரல் கொடுத்த மகத்தான தலைவர்.

சம்பள பேச்சு முதல் மக்களின் உரிமைகளை வென்றுக்கொடுப்பதில் ஆளும் அரசாங்கங்களுக்கும் கம்பனிகளுக்கும் கடுமையான அழுத்தங்களை கொடுத்ததுடன், அடிப்பணியாது செயறப்பட்டார்.

அவரது இழப்பை எவராலும் ஈடுசெய்ய முடியாது. அமரர் ஆறுமுகன் தொண்டமான் காட்டிய வழியில் இ.தொ.கா தமது பயணத்தை தொடரும் என்றும் செந்தில் தொண்டமான் தமது சிரார்த்ததின செய்தியில் கூறியுள்ளார்.

இதேவேளை இ.தொ.காவின் மறைந்த தலைவர் ஆறுமுகன் தொண்டமானின் 4 ஆம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு திருகோணமலை புனித ஜோசப் முதியோர் இல்லத்தில், இ.தொ.கா தலைவர் செந்தில் தொண்டமான் ஏற்பாட்டில் விசேட பிரார்த்தனைகள் இடம்பெற்றன. (05)

# உலக சாதனை படைக்கவுள்ள திருமலை ஸாஹிரா மாணவன்

(எம்.எம்.ஜெஸ்மின்)



'கடல் வாழ் உயிரினங்கள், முருகை கற்பாறைகளைப் பாதுகாத்தல் மற்றும் கடலில் சேரும் பிளாஸ்டிக் பொலித்தீன் ஆகியவற்றிற்கு எதிரான விழிப்புணர்வு அத்துடன் எமது தாய் நாட்டின் பொருளாதாரத்தை மேலோங்க செய்ய சுற்றுலா அபிவிருத்திக்கு பங்களிக்க வெளிநாட்டு முதலீட்டாளர்களை அழைத்தல் எனும் தொனிப் பொருளில் எதிர்வரும் ஜூன் மாதம் 15 ஆம் திகதி இந்தியாவையும் இலங்கையையும் இணைக்கும் 32 கிலோமீற்றர் தூரம் கொண்ட பாக்கு நீரிணையை நீந்தி கடந்து சாதனை புரியவுள்ளார்.

அவ்வாறு கடக்கும் பட்சத்தில் 'பாக்கு நீரினையைக் கடந்த முதல் முஸ்லிம்' என்ற பெருமையை தனதாக்கிக் கொள்வார்.

திருகோணமலை ஸாஹிரா கல்லூரில் தரம் 10 இல் கல்வி கற்கும் 15 வயது மாணவனான ஸலாமா, கடந்த 18 ஆம் திகதி இவர் பாக்கு நீரிணையின் இலங்கை கடல் எல்லையில் இருந்து தலைமன்னார் வரையான தூரத்தை பயிற்சி அடிப்படையில் நீந்தி கடந்துள்ளார்.

இவருக்கான நீச்சல் பயிற்சிகளை விமானப்படை கோப்பிறல் றொசான் அபேசுந்தர வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (05)

# கிரான்ட்பாஸில் இளைஞன் குத்திப்படுகொலை

காதல் உறவில் ஏற்பட்ட தகராறு காரணமாகக் கூரிய ஆயுதத்தால் தாக்கி இளைஞர் ஒருவர் கொல்லப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் சனிக்கிழமை கிராண்ப்பாஸ் பொலிஸ் பிரிவில் பேஸ்லைன் வீதி பண்டாரநாயக்க பகுதியில் இடம்பெற்றுள்ளது.

உயிரிழந்தவர் பேலியகொட பிரதேசத்தைச் சேர்ந்த 22 வயதுடையவர் என பொலிஸார் தெரிவித்தனர்.

வெசாக் வலயத்தை பார்ப்பதற்காகத் தனது நண்பர்கள் சிலருடன் ஒருகொடவத்தை நோக்கிச் சென்று கொண்டிருந்த வேளையில், இவர் சில நபர்களால் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டுள்ளார்.

இக்கொலைச் சம்பவம் தொடர்பில் வெல்லம்பிட்டிய பிரதேசத்தைச் சேர்ந்த 17 மற்றும் 18 வயதுடைய சந்தேக நபர்கள் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் கிராண்ப்பாஸ் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (05)

# ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வருகை வவுனியாவில் மூன்று அடுக்குப் பாதுகாப்பு







ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வருகையையடுத்து வவுனியாவில் மூன்று அடுக்கு பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

வடமாகாணத்திற்கு விஜயம் செய்துள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் இடம்பெற்ற பல்வேறு நிகழ்வுகளில் கலந்து கொண்ட பின் நேற்று வவுனியாவிற்கு வருகை தந்திருந்தார்.

வவுனியா பொது வைத்தியசாலை, மாவட்ட செயலகம் என்பவற்றுக்கு சென்ற ஜனாதிபதி பல்வேறு நிகழ்வுகளில் பங்கேற்றார்.

இதனையடுத்து வவுனியா நகரம் மற்றும் அதனையண்டிய பகுதிகள், பிரதான வீதிகள் என்பவற்றில் விசேட அதிரடிப்படையினர், இராணுவத்தினர், பொலிஸார் என மூன்று அடுக்கு பாதுகாப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதுடன், கலகம் அடக்கும் பொலிஸார், நீர் விசிறும் வாகனம் என்பனவும் தயார் நிலையில் விடப்பட்டிருந்தன. (05 - 100)

# யானையுடன் மோதி ரயில் தடம்புரழ்வு: தாய் பலி, குட்டி காயங்களுடன் மீட்பு

## வவுனியாவில் சம்பவம்

வவுனியா கனகராயன்குளம் காட்டு பகுதியில் யானையுடன் மோதி ரயிலொன்று தடம்புரண்டுனடுள்ளது.

இந்தச் சம்பவம் சனிக்கிழமை மாலை இடம்பெற்றுள்ளது.

குறித்த சம்பவத்தில் யாழில் இருந்து அனுராதபுரம் நோக்கி சென்ற ரயில் கனகராயன்குளம் காட்டு பகுதியில் ரயில் பாதையை ஊடறுத்துசென்றயானைமற்றும் குட்டியுடன் மோதுண்டுள்ளது.

இதன் காரணமாக யானை சம்பவ இடத்திலே பலியாகியுள்ளதுடன், யானை குட்டி காயங்களுடன் பொது மக்களின் உதவியுடன் மீட்கப்பட்டதுடன் மேலதிக சிகிச்சைக்காக வனஜீவராசிகள் திணைக்களத்தால் எடுத்துச் செல்லப்பட்டது.





மேலும் குறித்த விபத்து காரணமாக நான்கு மணி நேரத்தின் பின்னர் சம்பவ இடத்துக்கு பிறிதொரு ரயில் சேவை ஊடகவே பயணிகள் அழைத்துச் செல்லப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (05)

# இந்திய நாட்டின் நிறுவனங்களுக்கு குடியிருப்பு காணிகளை வழங்க முயற்சி

## இம்ரான் எம்.பி. பொதுமக்கள் சந்திப்பு

(எச் எம் ஹலால்தீன் )

திருகோணமலை முத்துநகர் பிரதேசத்தில் பல தசாப்தங்களாக பொதுமக்கள் குடியிருந்து வரும் நூற்றுக்கு மேற்பட்ட ஏக்கர் குடியிருப்பு மற்றும் விவசாய காணிகளை இந்தியாவின் சில தனியார் நிறுவனாங்களுக்கு குத்தகைக்கு வழங்கும் நோக்குடன் அக் காணிகளில் வசித்துவரும் மக்களை அப்பகுதியில் இருந்து உடனடியாக வெளியேறுமாறு இலங்கை துறைமுக அதிகார சபை அறிவித்திருந்தது.

இதனை அடுத்து அங்கு எழுந்துள்ள பதற்ற நிலை தொடர்பாக ஆராயும் நோக்கில் ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மகஷரூப் குறித்த பகுதிக்கு சனிக்கிழமை சென்று அப்பிரதேச மக்களுடன் இதுதொடர்பாகக் கலந்துரையாடினார்.

இப்பகுதியில் பல தசாப்தங்களாக மக்கள் குடியிருந்து விவசாய நடவடிக்கைகளில் ஈடுபட்டு வரும் நிலையில் இக்காணிகள் 1984 ஆம் ஆண்டு வர்த்தமானி மூலம் துறைமுக அதிகார சபைக்கு சொந்தமானவை என அறிவிக்கப்பட்டமையைத் தொடர்ந்தே இந்த பிரச்சினை தோற்றம் பெற்றது.

இப்பிரச்சினைக்கு நிரந்தர தீர்வை காணும் நோக்கில் அமைச்சு மற்றும் அதிகாரிகளுடனும் கலந்துரையாடஉள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் பொதுமக்களிடம் தெரிவித்திருந்தார்.

.இந்நிகழ்வில் பட்டினமும் சூழலும் பிரதேச சபை முன்னாள் உப தவிசாளர் நௌபர் உள்ளிட்ட பிரதேச மக்கள் பலர் கலந்துகொண்டனர். (05)

# ஜனாதிபதியின் வவுனியா வருகையை எதிர்த்துக் கறுப்புக்கொடிப் போராட்டம்

## காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் முன்னெடுப்பு

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வவுனியா வருகைக்கு எதிர்ப்பு தெரிவித்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களால் கறுப்புக் கொடி காட்டப்பட்டது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வவுனியா வைத்தியசாலை மற்றும் மாவட்ட செயலகம் என்பவற்றுக்கு நேற்று (ஞாயிற்றுக்கிழமை) பிற்பகல் வருகை தந்த நிலையில் மாவட்ட செயலகம் முன்பாக ஒன்று கூடிய வவுனியா மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கத்தை சேர்ந்த தாய்மார் சிலர் ஜனாதிபதியின் வருகைக்கு கறுப்பு கொடி காட்டி தமது எதிர்ப்பை வெளிப்படுத்தினர்.

இதன் போது அங்கு மேலதிக பொலிசார் மற்றும் அதிரடிப்படையினர் குவிக்கப்பட்டு குறித்த தாய்மாரை வீதிக்கு இறக்க விடாது தடுக்கப்பட்டிருந்தனர். சிறிது நேரத்தின் பின் மாவட்ட செயலக வாயிலுக்கு செல்ல முற்பட்ட தாய்மாரை பொலிஸார் வழிமறித்து அங்கிருந்து அவர்களை வெளியேற்றி இருந்தனர். இதன காரணமாக, மாவட்ட செயலகம் முன்பாக ஜனாதிபதியின் கூட்டம் முடியும் வரை பரப்பான நிலமை காணப்பட்டது.

(05 - 100)

# நீண்ட காலமாக புனரமைக்காது உடைந்துபோன பாலத்தில் வழுக்கி விழுந்து வயோதிபப் பெண் சாவு

நீண்ட காலமாக புனரமைக்கப்படாமல் உடைந்த நிலையில் இருந்த மரத்தூண் பாலத்தில் தடுக்கி விழுந்து வயோதிபப் பெண்ணொருவர் உயிரிழந்த சம்பவம் சனிக்கிழமை இடம்பெற்றுள்ளது.

புப்புரஸ்ஸ பொலிஸ் பிரிவுக்குபட்ட ஜீ.கே. பிரிவு தோட்டத்தில் உள்ள பாலம் சில வருடாங்களுக்கு முன் மழை காரணமாக இரண்டாக உடைந்துபோயிருந்துள்ளது.

இந்நிலையில், ஜீ.கே. பிரிவைச் சேர்ந்த 78 வயதுடைய மலையாண்டி காளியம்மா என்ற வயோதிபப் பெண், இந்த சிறிய உடைந்த பாலத்தை கடந்து வியாபார நிலையத்துக்கு சென்று, பொருள்களை வாங்கிக்கொண்டு வீட்டுக்குத் திரும்பியவேளையில், பாலத்தில் நடந்துவந்துள்ளார். அப்போது பாலத்தில் இருந்து வழுக்கி நீரோடையில் விழுந்து உயிரிழந்துள்ளார்.

அப்பகுதியைச் சேர்ந்தவர்கள் இதுவரை மரத்தூண்களை கொண்டு அமைக்கப்பட்ட சிறிய மரப்பாலம் ஒன்றினூடாகவே பயணித்து வருகின்றனர்.

இந்த பாலத்தை புனரமைத்துத் தருமாறு பல அரசியல்வாதிகள் மற்றும் அரச அதிகாரிகளுக்கு கோரிக்கை முன்வைத்தும், இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்று அப்பகுதியில் வசிக்கும் மக்கள் கவலையோடு தெரிவிக்கின்றனர்.

(05)

# விசம் கொடுத்து கணவன் கொலை மனைவியும் சகோதரனும் கைது

பெலியத்த கொஸ்ஹறகொட பகுதியில் மூன்று பிள்ளைகளின் தாயும் அவரது சகோதரரும் இணைந்து குறித்த பெண்ணின் கணவரை விஷத்தைக் கொடுத்துக் கொன்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டனர் எனப் பெலியத்த பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட பெண்ணின் கணவர் கடந்த 20ஆம் திகதி வீட்டில் மது அருந்திய போது ஏற்பட்ட சுகவீனம் காரணமாக உயிரிழந்துள்ளார் எனவும் பிரேதப் பரிசோதனையின் போது விஷம் அருந்தி உயிரிழந்துள்ளார் எனவும் தெரியவந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்நிலையில் கைதான இருவரிடம் பொலிஸார் விசாரணை செய்த போது , கணவரின் குடிநீர் போத்தலில் தங்கம் பூசுவதற்குப் பயன்படுத்தப்படும் நச்சு இரசாயனமான பதார்த்தத்தைக் கலந்ததாகத் தெரியவந்துள்ளது.

பெலியஅத்த கொஸ்கஹாகொட பகுதியைச் சேர்ந்த 45 வயதுடைய நபரே இவ்வாறு உயிரிழந்துள்ளதுடன் சந்தேக நபர்கள் ஞாயிற்றுக்கிழமை தங்காலை நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.(05)

# வெசாக் வலயத்துக்கு மின்சாரம் வழங்க முற்பட்ட நபர் மின்சாரம் தாக்கி இறப்பு

வெசாக் வலயத்திற்கு மின்சாரம் வழங்கும் பணியில் ஈடுபட்டிருந்த ஐம்பது வயதுடைய நபர் ஒருவர் மின்சாரம் தாக்கி உயிரிழந்துள்ளார் என கபிதிகொல்லாவ பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

மரதன்மடுவ, கபுகொல்லாவ பகுதியைச் சேர்ந்த 50 வயதுடைய ஒரு பிள்ளையின் தந்தையே உயிரிழந்துள்ளார்.

விகாரையில் அமைக்கப்பட்டிருந்த வெசாக் வலயத்திற்கு மின்சாரம் வழங்க முற்பட்ட போது மின்சாரம் தாக்கப்பட்டுள்ளது .

மின்சாரம் தாக்கிய நிலையில் இவரை கபித்திகொல்லேவ வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டதன் பின்னர் இவர் உயிரிழந்தார் எனப் பொலிஸார் தெரிவித்தனர். (05)

# காட்டு யானை தாக்கியதில் முதியவர் பரிதாபகரச் சாவு

கிராதுருக்கோட்டை பொலிஸ் பிரிவுக்குப்பட்ட கிராதுருகோட்டை பேரியல் சந்தி பகுதியில் ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 4 மணியளவில் காட்டு யானை தாக்கியதில் முதியவர் உயிரிழந்தார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

கிராதுருக்கோட்டை பகுதியை சேர்ந்த 82 வயதுடைய ஒருவரே உயிரிழந்தார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று அதிகாலை முதியவர் தனது வீட்டுக்கு வெளியே வந்தபோதே காட்டு யானையால் தாக்கப்பட்டார் எனக் கூறப்படுகிறது. (05)

# நுவரெலியா – கந்தப்பளையில் மரங்கள் முறிந்துவிழும் அபாயம்

## 162 பேர் இடம்பெயர்வு

நாட்டில் இடம்பெற்றுவரும் சீரற்ற காலநிலை காரணமாக நுவரெலியா மாவட்டம், கந்தப்பளை, ஹைபொரஸ்ட் மஹாவலி குடியிருப்பில் வசிக்கும் 58 குடும்பங்களை சேர்ந்த 162 பேர் கடந்த வியாழக்கிழமை முதல் இடம்பெயர்ந்துள்ளனர்.

இந்த குடியிருப்புக்கு அருகில் ஆபத்தான மரங்கள் சரிந்து விழும் சம்பவங்கள் அதிகரித்துள்ளதால் பாதுகாப்பு நலன் கருதி அக்குடியிருப்பிலிருந்து வெளியேற்றப்பட்டு, 11 குடும்பங்களை சேர்ந்த 45 பேர் தற்காலிகமாக தோட்ட சிறுவர் பராமரிப்பு நிலையத்தில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

சிறுவர் பராமரிப்பு நிலையத்தில் போதிய இடவசதி இன்மையால் ஏனைய 47 குடும்பங்களை சேர்ந்த 117 பேர் உறவினர் மற்றும் அயலவர்களின் வீடுகளில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

அண்மையில் அப்பகுதியில் மூன்று வீடுகளில் மரங்கள் முறிந்து விழுந்து ஒருவர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார் என அப்பகுதியில் வசிக்கும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

நாட்டில் நிலவும் பலத்த மழை மற்றும் கடும் காற்றுடன் கூடிய மோசமான காலநிலை காரணமாக எங்களது வீடுகளுக்கு அருகிலுள்ள மரங்களும் அதன் கிளைகளும் முறிந்து விழும் நிலையில் அருகிலுள்ள வீடுகள், மனித உயிர்கள், உடைமைகளுக்கு பாதிப்பினை விளைவிக்கும் அபாய நிலை காணப்படுகிறது.

இதனால் இரவு நேரத்தில் உறங்க முடியாமல், அனைவரும் ஒன்றிணைந்து வீதியில் நிற்பதே எங்களின் தொடர்கதையாக உள்ளது. இப்பகுதியிலுள்ள

பாரிய மரங்கள் எந்த நேரத்திலும் விழும் அபாயம் காணப்படுகிறது என்று அப்பிரதேசவாசிகளும் வீதிப் போக்குவரத்தில் ஈடுபடும் சாரதிகளும் தெரிவிக்கின்றனர்.

1987ஆம் ஆண்டு குடியேற்றப்பட்ட காலத்திலிருந்து, அங்கே பலத்த காற்றினால் பெரிய மரங்கள் அருகிலுள்ள வீடுகளின் மீது விழும் அபாயம் உள்ளதாக உரிய அதிகாரிகளுக்கு அறிவித்து எவ்வித பயனும் இல்லை எனவும் அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

கடந்த ஜனவரி மாதம் இது தொடர்பாக வலப்பனை பிரதேச செயலாளரிடம் கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன.

அதைத் தொடர்ந்து, பிரதேச செயலாளர் ஆபத்தான மரங்களை அகற்றுமாறு வனவள திணைக்களத்தின் நுவரெலியா மாவட்ட வன அதிகாரிக்கு அறிவித்துள்ளார்.

ஆனால், பலத்த காற்றுடன் கூடிய மழைக்காலம் வரை அந்த மரங்களை அகற்ற மாவட்ட வன அலுவலர் நடவடிக்கை எடுக்கவில்லை என அப்பகுதி மக்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

எனவே, இனிவரும் காலங்களில் மழையுடன் கூடிய பலத்த காற்று வீசினால் ஆபத்தினை ஏற்படுத்தும் வகையில் உள்ள மரங்களை பாரிய அனர்த்தங்கள் ஏற்படுவதற்கு முன்பே அகற்ற சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரிக்கை விடுக்கின்றனர்.

(05)

# ஹெரோயின் விற்பனையில் ஈடுபட்ட மதுவரி உத்தியோகத்தர் ஒருவர் கைது

## தனியார் வங்கி உதவி முகாமையாளர் உட்பட மேலும் நால்வரும் மாட்டினர்

*ஹெரோயின் விற்பனையில் ஈடுபட்டதாகக் கூறப்படும் மதுவரி உத்தியோகத்தர் மற்றும் தனியார் வங்கி ஒன்றின் உதவி முகாமையாளர் உட்பட ஐவரை அலவத்துகொடை பொலிஸார் கைது செய்துள்ளனர்.*

*ஹெரோயின் விற்பனையில் ஈடுபட்ட சந்தேக நபரொருவர் அலவத்துகொடை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளதுடன், அவரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் குறித்த நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் .*

*கைது செய்யப்பட்ட ஐவரில் ஒருவர் கொழும்பு கலால் தலைமை அலுவலகத்தில் கடமையாற்றும் கலால் அதிகாரி எனத் தெரியவந்துள்ளதுடன் இவரிடமிருந்து ஹெரோயின் போதைப்பொருள், ஐஸ், கஞ்சா, டிஜிற்றல் தராசு மற்றும் பத்தாயிரம் ஷரூபா பணம் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன. (05)*

# பலத்த காற்றினால் பதுளையில் 114 வீடுகள் சேதம் ஒருவர் சாவு

## இருவர் காயம்

நாட்டில் கடந்த சில நாள்களாக வீசிய கடும் காற்றால் பதுளை மாவட்டத்தில் 114 வீடுகள் சேதமடைந்துள்ளன எனவும் ஒருவர் உயிரிழந்துள்ளார் எனவும் இருவர் காயமடைந்துள்ளனர் எனவும் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவு தெரிவிக்கிறது. அதன்படி, பதுளை மாவட்டத்துக்கு உட்பட்ட 15 பிரதேச செயலகப் பிரிவுகளில் ஏற்பட்ட சேதங்களின் விவரங்கள் பின்வருமாறு: ஹப்புத்தளை பிரதேச செயலகப் பிரிவில் ஒருவர் உயிரிழந்துள்ளார் 2 பேர் காயமடைந்துள்ளனர். பதுளை 3, ஹாலிஎல 3, எல்ல 1, பண்டாரவளை 22, ஹப்புத்தளை 20, அல்துமுல்ல 23, வெலிமடை 13, ஊவா பரணகம 18, சொரணதொட்ட 2, கந்தகெட்டிய 1, மீகஹகிவுல 3, ரிதிமாலியத்த 1, மஹியங்கனை 1, பசறை 1 மற்றும் லுணுகலை 2 ஆகிய பகுதிகளில் வீடுகள் சேதமடைந்துள்ளன என அனர்த்த முகாமைத்துவ பிரிவு தெரிவித்துள்ளது. அத்தோடு, தற்போது நிலவும் கடும் காற்றால் மரங்கள் முறிந்து விழும் அபாயம் காணப்படுவதால், மரங்கள் தமது வீடு மற்றும் அலுவலகத்துக்கு அருகில் இருந்தால் மிகவும் அவதானமாக இருக்குமாறும் அனர்த்த முகாமைத்துவ பிரிவு மக்களை கேட்டுக்கொண்டுள்ளது. (05)

## கிண்ணியா ஆலங்கேணி சித்தி விநாயகர் ஆலயத்தில் வெசாக் பண்டிகை பெருவிழா





வெசாக் பண்டிகையை முன்னிட்டு கிண்ணியா ஆலங்கேணி சித்தி விநாயகர் ஆலயத்தில் இளைஞர் விவகார அமைச்சு,தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் மற்றும் கிண்ணியா பிரதேச இளைஞர் கழக சம்மேளனம் ஆகியன இணைந்து ஆலய மண்டபத்தில் பூஜை வழிபாட்டு நிகழ்வு, போதை பொருள் தடுப்பு விழிப்புணர்வு நிகழ்வு,அறநெறி பாடசாலை மாணவிகளுக்கான திருக்குறள் மனனப் போட்டியும் இடம்பெற்றது. இந் நிகழ்வில் கிண்ணியா பிரதேச செயலளார் ஆர்ஆ.கணி,கிண்ணியா நகர சபை செயலாளர் ஆமு.அணிஸ், கிண்ணியா பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பெனாண்டோ, இளைஞர் சேவை அதிகாரி ஜப்ரி,

திருகோணமலை மாவட்ட தேசிய பிரதிநிதியும்ஃகிண்ணியா பிரதேச இளைஞர் கழக சம்மேளனத்தின் தலைவருமான நுஸ்ரி, உளவளத்துணை உத்தியோகத்தர் ரியாத்,கிண்ணியா பிரதேச செயலக போதைப்பொருள் தடிப்பு பிரிவு உத்தியோகத்தர்களான றிப்னாஸ், பக்தாத்,இந்து கலாசார உத்தியோகத்தர் அன்பழகன், ஆலய மதகுரு,கிண்ணியா பிரதேச இளைஞர் கழக சம்மேளனத்தின் நிர்வாகிகள்,அறநெறி பாடசாலை மாணவிகள், பெற்றோர ்கள் என பலர் கலந்து கொண்டனர். (05)

## திமிங்கில வாந்தியுடன் மீனவர் ஒருவர் கைது

பேருவளை, கரடகொட பகுதியில் திமிங்கில வாந்தி எனப்படும் 30 கிலோ கிராம் ஆம்பருடன் மீனவர் ஒருவர் நேற்று (ஞாயிற்றுக்கிழமை) கைது செய்யப்பட்டார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

பேருவளை கரையோரப் புலனாய்வுப் பிரிவின் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் இவர் கைதுசெய்யப்பட்டுள்ளார் .

கைதானவர் 43 வயதுடையவர் என்பதுடன் இவரிடமிருந்து கைப்பற்றப்பட்ட திமிங்கல அமரின் பெறுமதி சுமார் ஐம்பது கோடி ஷரூபா என பொலிஸார் தெரிவிக்கின்றனர். (05)

## திருநாவுக்கரசு குருகுலத்தில் வைகாசி விசாக நிகழ்வுகள்

(வி.ரி. சகாதேவராஜா )

திருக்கோவில் விநாயகபுரம் திருநாவுக்கரசு நாயனார்

குருகுலத்தில் வருடாந்த வைகாசி விசாக நிகழ்வு வியாழக்கிழமை பக்திப்பரவசத்துடன் குருகுலப்பணிப்பாளர் கண இராஜரத்தினம் தலைமையில் நடைபெற்றது. (05)






இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 27.05.2024இல் வெளியிடப்பெற்றது